கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௭.] சௌமிய ௵ ஆவணி ௴ [பகுதி-௧௦.

## பழந்தமிழ்ச்சரிதம்.

(முற்றொடர்ச்சி.)

போரிலிறந்த வீரர்க்குக் கல் நடுதல் என்னும் வழக்கு பழந் தமிழ்நூல்களுள்ளுங் கூறப்படுகின்றன. இவ் வீரச்செயலைப்போன்றே செய்ந்நன்றியறிதலையுந் தம்முயிரினு மோம்பத்தக்கதாகத் தமிழர் பழங்காலத்துக் கொண்டிருந்தனரென்பதைச் சில சாஸனங்களுந் தமிழ்நூல்களும் விளக்குகின்றன. இவ்வாறே இவர்களது பெண்மக்கள் உயிரினுஞ் சிறந்து தம் கற்பையே போற்றிவந்தனரென்பதைப் பழந்தமிழ்நூல்கள் பலவற்றுள்ளும் பரக்கக்காணலாம்.

இதுகாறும் விந்தியமலையின் றென்பாகத்தையடைந்த தமிழர் வேற்றுச்சாதியாரின் கலப்பின்றி மிக்க நாகரீகத்துடன் வாழ்ந்த அவர்களது வழக்க ஒழுக்கங்களை யெம் சிற்றறிவிற்கு எட்டியவண்ணமுள்ள ஆராய்ச்சிகொண்டு எழுதினோம். இன்னும் விரிக்கிற்பெருகுமாதலின், விரிவஞ்சி இதனை இங்ஙன் இம்மட்டோடுவிட்டு, இத்தமிழர் அன்னிய சாதியாரோடு கலந்த காலத்தைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

நாகரென்ற பெருவலிபடைத்த வகுப்பினரும், இயக்கரென்ற வகுப்பினரும் தென்னாட்டில்வந்து இத்தமிழரோடு கலந்ததாக வெளியாகின்றது. முன்னவராகிய நாகர்பழங்காலத்தில் இப்பரதகண்டம் முழுதும் வியாபித்திருந்தமையோடு இந்தியாவை யடுத்துள்ள

தீபங்கள் பலவற்றினும் பரவியிருந்ததாகப் பலநூல்களாலுமறியப் படுகின்றது. மற்ற இயக்கரென்ற வகுப்பினர் தெற்கே பரவியிருந்த வரலாறு வான்மீக இராமாயணத்திற் கூறப்படுதலோடு இற்றைக்கு 2500-வருடங்களுக்குமுன் இலங்கையிற் படையெடுத்துச் சென்ற "விஜயன்" என்னும் ஆரிய அரசன் அத்தீபம் இயக்கர்களாணிரம்பியிருந்ததைக் கண்டனனென்றும், அக்குலத்துப்பெண்ணுயுள்ள "குவேனி" என்பாளை யவன் மணம்புரிந்தானென்று மிலங்கைப்பூர்வசரித்திரங்கள் நன்கு விளக்குகின்றன. இவ்வியக்கரைச் சீனர் "யூகி"என்றும், சிங்களர் "எக்கோ"என்றும், ஆரியர் "யக்ஷர்" என்றும் வழங்குவர். நாகர், இயக்கர் என்னும் இவ்விரு பெருஞ் சாதியாருந் தமிழருடன் கலந்தகாலம், ஆரியர் தமிழருடன் கலந்த காலத்துக்கு முற்பட்டதென்றே விளங்குகின்றது. கலைகளினும், அரசுத்தொழில் நெய்தற்றொழில்முதலிய பலதொழில்களினும் விருத்தியடைந்திருந்த நாகரென்னுஞ் சாதியாரது கலப்புத் தமிழரை மிகவும் மேன்மைபெறச்செய்தது. நாகர் இயக்கரென்னு மிவ்விரு வகுப்பினரது வழக்கவொழுக்கங்கள் தமிழரிடத்துந், தமிழரது வழக்கவொழுக்கங்கள் அவ்வகுப்பினர்மாட்டுங் கலக்கக்காலாந்தரத்தில் அவ்விருவகுப்பினருந் தமிழருடன் ஒன்றுபடலாயினர்.

(தொடரும்.)

பொ. பாண்டித்துரை.

---

உ

திருச்சிற்றம்பலம்.

# சைவாதீனமுந் தமிழும்.

(முற்றொடர்ச்சி)

பதினாறுவதுபட்டத்திலிருந்த சுப்பிரமணியதேசிகமூர்த்தி சேற்றூர்ச்சமஸ்தான வித்துவான்களாகவிருந்த கந்தசாமிக்கவிராயர், இராமசாமிக்கவிராயர், கல்லிடைக்குறிச்சிச சிதம்பரநாதக்கவிராயர் முதலியபலர்களை யொருசாலைமாணக்கராகவைத்துக் கற்பிக்கும்படி செய்வித்துத் தாமுமுடனிருந்து அவ்வாதீன மகாவித்துவான் றம்பிரானெனவிருந்த தாண்டவராயமுனிவர்பாற், பலநூல்களைக்கற்றுரா

யர்ந்தேறிச் சிவஞானசித்தியார் சுபக்ஷத்திற்குச் சிவஞானமுனிவர் செய்தருளிய பொழிப்புரை எளிதில்விளங்குமாறு பதவுரையெழுதி வைத்தருளினர்; இத்தேசிகமூர்த்தி பாவநாசத்திற்கடுத்திருக்கின்ற சிவந்திபுரமடத்தி லெழுந்தருளியிருந்தபோது, ஆதீனத்திலிருந்து கற்றுத்தேறிய தம்பிரான்களும், வித்துவான்களுங்கூடியிருந்தமையால் அவர்கள் செய்துகொண்டுவந்த செய்யுட்களைக்கேட்கும் பேரவாவுற்று, அந்திப்போது அநுட்டானமுடித்துச் சபைகூடும்வண்ணஞ்செய்து ஒவ்வொருவர் கவிகளையுமவற்றின் பொருள்களையுங்கேட்டுப் பெருமகிழ்ச்சியுற்று ஒவ்வொருவருக்குந்தக்கவாறு பரிசளித்தருளவே இரவுநீங்கி அருணோதயகாலமாயிற்று; உடனே எல்லாருமிரவுகழிந்தது தெரியாதிருந்ததும், அமுதருந்தாதிருந்ததுநோக்கி ஆச்சரியமுற்றார்கள். அத்தேசிகமூர்த்தி, "செவிக்குணவில்லாதபோழ்து சிறிது - வயிற்றுக்குமீயப்படும்" என்னுந்திருக்குறளைத் திருவாய்மலர்ந்தருளினர்; அன்றிரவிலாக்கியிருந்த அமுதுகறி முதலானவெல்லாம் பசுமுதலிய காலிகட்கே யுபயோகமாயின; இதனை யுற்றுநோக்குங்கால் இத்தேசிகமூர்த்தி தெய்வச்செந்தமிழையபிமானித்து விருத்திசெய்து வித்துவான்களை யாதரவுசெய்துவந்த பெருந்தகைமையுடையராயிருந்தனரென்பது எல்லார்க்கும் வெளியாகும்.

அன்றியும், மகாகவியாகிய திரிசிரபுரம் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையென்னும் வித்துவசிந்தாமணியை வரவழைத்துவைத்துத் தமக்குப்பின் சின்னப்பட்டத்திலிருந்த நமசிவாயதேசிகமூர்த்தி, திருப்பனந்தாட்காசி மடபதியாயிருந்த குமாரசாமித்தம்பிரான், குன்றக்குடியாதீனத்து ஆறுமுகதேசிகர்; மூவலூர்மடபதி பழனிக்குமாரத்தம்பிரான், இராமலிங்கத்தம்பிரான்முதலிய தம்பிரான்களுக்கும், கும்பகோணங்காலேஜ், தமிழ்ப்பண்டிதர் தியாகராஜசெட்டியார், சென்னைக்காலேஜ், தமிழ்ப்பண்டிதராகிய மகாமகோபாத்தியாயர், சாமிநாதையர்முதலிய பல்லோர்களுக்கும் பலநூல்களைக்கற்பிக்கும்படி செய்தருளினர்.

இங்ஙன மிவ்வாதீனத்தருள்பெற்றுப் பலருக்குங்கற்பித்திருந்த வித்துவசிந்தாமணி அங்கிருந்துகொண்டே செய்தபுராணங்களுஞ் சிறுநூல்களு மெத்தனையென்று கூறுவோம்; அவை, நாகைக்காரோ

ணப்புராணம், மாயூரப்புராணம், குடந்தைப்புராணம், திருப்பெருந் துறைப்புராணமுதலிய பலபுராணங்களும், சீகாழிக்கோவை, திருவிடைமருதூருலா, உறையூர்க்காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ், அம்பலவாணதேசிகர் கலம்பகம் முதலிய பலசிறுநூல்களுமேயாம்.

இவர்பாற் கற்றுணர்ந்தோர் ஒவ்வொருவரும் பல்லோர்களுக்குங் கற்பித்தனர்; இவர்பாற் கற்றுத்தேறிய நமசிவாயதேசிகமூர்த்தி யிலக்கியவிலக்கணங்கள், சித்தாந்தசாத்திரங்கள் முதலியநூல்களில் வல்லவரென யாவர்வரினும் அவருடன் வாதிட்டுத்தமது மேற்கோளைச் சாதிக்க வல்லவராயிருந்ததுமன்றி, அனந்தகிருட்டிணக்கவிராயர், மு. ரா. அருணாசலக்கவிராயர், ரா. சுப்பிரமணியக்கவிராயர் முதலிய பலர்களுக்கும் பலநூல்களையுங் கசடறநன்கு கற்பித்தருளியிருந்து சிவஞானபோதச்சிற்றுரைக்குப் பதவுரையுஞ்செய்தருளினர். இந்தச்சுப்பிரமணியக்கவிராயர்பாற் கற்றோர் சூரியனார்கோயிலாதீன மகாசந்நிதானமாகிய முத்துக்குமாரதேசிகமூர்த்தி முதலோரநேகருளர்.

இன்னும் அவ்வாதீனத்திலே தேசிகமூர்த்திகளும் பலதம்பிரான்கள் முதலியோர்களுஞ்செய்த நூல்களும், உரைகளும், கற்றவர்களும் இவ்வளவிற்றென்று மதித்துக்கூறவடங்காதென்ப துலகப் பிரசித்தமே.

ஒரு தம்பிரான் சிவபுண்ணிய விருப்பமிகுதியாற் பன்னிருதிருமுறைகளையு மெய்கண்டசாத்திரங்களையுமெழுதி யெழுதிக்கொடுத்துப்பெற்ற பெரும்பொருளெல்லாங்கொண்டு திருவாவடுதுறை வடக்கு வீதியிற் சிவஞானமுடையார்கோயிற் கருப்பக்கிரகமும், அர்த்த மண்டபமுங் கட்டுவித்திருக்கின்றனர். அவ்வாதீனத்தில் நெடுநாளிருந்து கற்றுத்தேறிய மதுராபுரிவாசியாகிய ஞானசம்பந்தப்பிள்ளையிடத்தும், மூவலூர்மடபதி பழனிக்குமாரதம்பிரான்சாமியிடத்தும் காவியங்கள் புராணங்கள் சித்தாந்தசாஸ்திரங்களெல்லாங் கற்றுத்தேறிய பாலவனத்தம் ஜமீந்தார், ஸ்ரீமாந்-பொ. பாண்டித்துரைசாமித்தேவர் என்னும் புலவர்திலகர் மதுரையிற்றமிழ்ச்சங்கந்தாபித்து பல மாணாக்கர்களுக்குக் கற்பித்துவருகிறதுடன் பல வித்துவான்களை வைத்துப் பலநூல்களை ஆராய்ச்சிசெய்வித்து வெளிப்படுத்தி வருகின்றனர்.

தமிழரசர்களால் புரக்கப்படுதல் நீங்கியபின், இவ்வாதீனமே தமிழைவளர்த்தற்குத் தரைமிசையமர்ந்துநின்ற சாரதாபீடமாயிருந்ததென் றெல்லாவித்துவான்களுங் கூறுவர்.

இனித் தருமபுரவாதீனத்தில் எழுந்தருளியிருந்த தேசிகமூர்த்திகள் நூல்களையுமுரைகளையு மிகுதியாகச்செய்யாவிடினும் பக்குவமுற்றுக்கற்போர்க்கு மெய்கண்டசாஸ்திரங்களைப் போதிப்பதிலே வல்லராயிருந்தனர்.

இவ்வாதீனத்துத் தம்பிரானாகிய குமரகுருபரமுனிவர் இளம்பருவத்திலே முருகக்கடவுளின் றிருவருள்பெற்றுக், கந்தர்கலிவெண்பா, மீநாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ், மீநாக்ஷியம்மைகுறம், இரட்டைமணிமாலை, மதுரைக்கலம்பகம், நீதிநெறிவிளக்கம், திருவாரூர் நான்மணிமாலை, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், சிதம்பரமும்மணிக்கோவை, சிதம்பரச்செய்யுட்கோவை, சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை, பண்டாரமும்மணிக்கோவை, காசிக்கலம்பகம், சகலகலாவல்லிபதிகம், காசியட்டகமுதலிய பிரபந்தங்களைச் செய்தருளினர்.

இம்முனிவர் முருகக்கடவுளின் றிருவருள்பெற்றவராதலால் இவர்செய்தநூல்க ளெக்குற்றங்களுமின்றிக் கற்பனைகளும், மெய்கண்டசாத்திரத்தின் கருத்துக்களு மிகச்சிறந்திருக்கின்றனவென்று பாவலரெல்லாம் பாராட்டுகின்றனர்;

இம்முனிவர் மீநாட்சியம்மைபிள்ளைத்தமி ழரங்கேற்றியபோது திருமலைநாயக்கர், தமக்குக் கனகாபிடேகஞ்செய்த பொருளையெல்லாந் தம்முடைய ஆசிரியரிடஞ்சேர்க்க அவர் நமக்காகாது காசியிற் றருமஞ்செய்வாயென்று கட்டளையிட அவ்வாறே அப்பொருளையெல்லாங் காசியிற்கொண்டுபோய்க் கோயின்மடமுதலியன கட்டுவித்தருளினர்.

இம்முனிவர் ஸம்ஸ்கிருதம், ஹிந்துஸ்தானிகளிலும் வல்லவராய்த், தமது தெய்வத்தன்மைகண்டு டில்லிப்பார்ச்சா மிகச்சிறப்புச்செய்யப்பெற்றவராயிருந்து தருமபுரவாதீனத்தை மிகத்துலங்கச்செய்தனர்.

இன்னுமவ்வாதீனத்திற் சம்பந்தசரணாலயமுனிவர் பலநூல்களையுங் கற்றவராயிருந்து கந்தபுராணச்சுருக்கமுதலிய நூல்களைச்செய்தருளினர்; இவர் மைசூர் அரசரைக்காண நேரிட்டபோது அவ்வரசர் உங்களிடங்களிலுள்ளார்க ளென்னவேலை செய்வார்களென்று வினவினார்; உடனே,

" ஆய்வார் பசுபதி பாசத்தி னுண்மையை யாய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல் லாங்கல்வி கேள்வியல்ல
லோய்வார் சிவானந்த வாரியுள் ளேயொன் றிரண்டெறத்
தோய்வார் கமலையின் ஞானப்பிர காசன்மெய்த் தொண்டர்களே."

என்னுஞ் செய்யுளைக்கூறிப் பிரசங்கித்தனர். உடனே அவ்வரசர் பலசிறப்புச்செய்து விடுத்தனர்.

இன்னுமவ்வாதீனத்தில் வெள்ளியம்பலவாணமுனிவர் கவிகள் செய்வதின் மிகவல்லவராயிருந்ததன்றிச் சிந்துபூந்துறையிலிருக்கும் போது துறைமங்கலம் வீரசைவச்சிவப்பிரகாசரை நன்கு பரிசோதனையுஞ்செய்தனர். இவர் கல்வித்திறமை யாவருமதிக்கத்தக்கதே யென்பர்.

இலக்கண விளக்கஞ்செய்த திருவாரூர் வைத்தியநாதநாவலரு மிவ்வாதீனத்தைப் பெருமைப்படுத்திய பாவலரென்பர்.

இனித் திருவண்ணாமலையாதீனத்தி லெழுந்தருளியிருந்த தேசிகமூர்த்திகளுஞ் சைவசித்தாந்த சாத்திரங்களைப்போதிப்பதில் வல்லராகவேயிருந்தனர். அவர்களிலே, குகையில் வசித்தவராயினுங் குன்றிலேற்றிய தீபம்போல்விளங்கிய குகை நமசிவாயதேசிகமூர்த்தியின் சாத்திரவுணர்ச்சியின் பெருமை பலருமறிந்ததே; இத்தேசிகமூர்த்திபாற் கற் றருள்பெற்றவராகிய ஆறுமுகசுவாமி என்னுமுனிவர் சிதம்பரமருவி வடகலையிலும் வல்லவராயிருந்து சிவஞானசித்தியார் சுபக்ஷத்திற்குரையெழுதினர்.

இனிச் சூரியனார்கோயிலாதீனத்திலெழுந்தருளிய தேசிகமூர்த்திகளுஞ் சாஸ்திரவாராய்ச்சியில் வல்லவராகவேயிருந்து கற்போர்க்குபகரித்தருளியே யிருந்தனர்;

இத்தேசிகமூர்த்திகளுள்ளே சிவாக்கிரயோகிகள் என்னுந் தேசிகமூர்த்தி தென்மொழி வடமொழியிரண்டினு மிக வல்லவராயிருந்து சிவஞானசித்தியார் சுபக்ஷத்திற்குத் தமிழுஞ்சம்ஸ்கிருதமுமாக வுரைசெய்தருளினர். இவ்வுரை யெல்லாவித்துவான்களும் வியந்து பாராட்டத்தக்கதாயிருக்கின்றது; தஞ்சையில் வைணவரோடு வாது நிகழ்ந்துழி அத்தஞ்சை மன்னர் இத்தேசிகமூர்த்தியை யழைத்துப் பேசும்படிசெய்ய அவர் வினவியவினவிற்கெல்லாந் தக்கபடி விடையளித்து ஏழுநாள்வரையும் வாதிட்டுச் சிவமேதெய்வமென நிலைநாட்டியருளினர்.

இனி வீரசைவாதீனத்தவருள்ளே, துறைமங்கலத்துச் சிவப்பிரகாசசுவாமியும் பலநூலாராய்ச்சியில் வல்லவராயிருந்து, சோணசைலமாலை, நால்வர்நான்மணிமாலை, திருச்செந்திலந்தாதி, பழமலையந்தாதி, பிக்ஷாடனநவமணிமாலை, பெரியநாயகிவிருத்தம், பெரியநாயகி கலித்துறை, நன்னெறி, திருவெங்கைக்கோவை, திருவெங்கைக்கலம்பகம், திருவெங்கையுலா, காளத்திப்புராண முற்பாகம், வேதாந்த சூடாமணி முதலிய பலநூல்கள்செய்து பலவற்புதமுஞ் செய்தருளினர்.

இவ்விதமாகவே ஆதீனங்களிலுள்ள பல வித்துவசிகாமணிகள் கலைஞானத்தைப்பருகி அதனையுலகெல்லாம் விதைத்து வளர்த்துவந்தனர்; அவரெல்லாம் மறைந்தனரே!

இத்தெய்வத்தமிழை யாதரித்துவந்த சர்வகலாசாலையாரு மிக்காலத்திற் கைநழுவவிட்டனரே; அந்தோ! பரிதாபம்.

ஆதீனங்களிலே வித்துவகோஷ்டியோ மிகக்குறுகியது; சைவநூன்முதலிய நூற்பயிற்சியு மறைவாயினது; கற்கவருவாருங் காணவில்லை; குருபத்தியுந்தெய்வபத்தியுஞ் சமயாசாரங்களுமுலகிற் குறைந்துவருகின்றன; இவற்றையபிமானித்து விருத்திசெய்வதற்கன்றோ சைவாபிமானிகளாயிருந்த பல ஜமீந்தார்களும், பலபிரபுக்களும், அதிகாரிகளும் அளவிடக்கூடாத நிலங்களைத் தானஞ்செய்தார்கள்.

இக்காலத்திலே அவ்வபிமானிகள் கருத்துக்குப்பொருந்திய செய்கைகள் யாதொன்றுமவ்வாதீனகர்த்தர்கள் இயற்றுதொழிந்தும்,

அதனைவாளாபார்த்திருத்தல் சைவசமயாபிமானிகட்குந் தமிழபிமானிகட்கும் மளவில்லாக்கேடாகும்.

ஆதீனங்களிலே யெத்தனையோ விஷயங்கட்குப் பெரும்பொருள்களைச் செலவுசெய்யக்காண்கின்றோம்; அச்செலவுகளோ டொன்றாகச்சேர்த்துத் தக்க பொருட்செலவுசெய்து தமிழ்ப்பயிரை வளர்த்தல் கூடாதா?

முன்னோர்களைப்போலத் தமிழ்ப்பயிரை வளர்த்தற்குத்தக்க வேற்பாடுசெய்யவேண்டுந் தருணமிதுவே; இங்ஙனஞ் செய்யாவிடிலோ தமிழ்ப்பயிர் வரவர வாடப்படுந்தமிழ்ப் பயிராகிவிடுமென ஆதீனத்தார்களிடம் வேண்டிக்கேட்டும் அவ்வாறு அவர் செய்யாதொழியில் அதற்குத்தக்க பரிகாரஞ்செய்யுங் கடமையுங்கட்கிருந்துமதனையறியாதவர் போலிருக்கின்றீர்; அந்தோ! இதுவுமொரு பெரும்பாவமேயாம்.

சைவாபிமானிகளே! அருந்தமிழார்வமுள்ள விற்பன்னர்களே! இனியாயினு நாடோறுங்கூட்டங்கூடி ஆதீனத்தார்களுக்குத் தெரிவித்து வேண்டிக்கொள்ளுமுறைகளை யாலோசித்துப்பேசி அவ்வாறே யறிவிக்கைசெய்து தெய்வச்செந்தமிழ்ப்பயிரை வளர்க்கும்படிசெய்ய முயலுங்கள் முயலுங்கள்; இக்காலத்திலிதனிலுஞ்சிறந்த புண்ணியம் வேறில்லை; "முயற்சி திருவினையாக்கு முயற்றின்மை, யின்மை புகுத்தி விடும்." "உள்ளுவதெல்லா முயர்வுள்ளன் மற்றது, தள்ளினுந் தள்ளாமை நீர்த்து."

முற்றிற்று.

எம். எஸ். பூரணலிங்கப்பிள்ளை, பி. ஏ.

---

உ

# ஆங்கில மொழிக்கலப்பு.

ஆதியிலே மனிதர்கள், தங்கள் உள்ளநிகழ்ச்சிகளை மற்றையோர்க்கு வெளிப்படுத்தவேண்டி அவற்றை, உவகை வெகுளி வியப்பு அவலம் முதலியவற்றைக்குறிக்கும் மெய்ப்பாடுகளினாலும், அழுதல் நகைத்தல் கண்காட்டல் கூவுதல் முதலிய ஒலிக்குறிகளினாலும், தலை

யசைத்தல் கண்காட்டல் கைநீட்டல் ஆதிய சைகைகளினாலும், விரலாற் றரையிற்பொறித்த உருவம் முதலியவற்றானும், வெளிப்படுத்தியிருப்பார்கள் என்பது மனுடவியல்பை ஆய்ந்துணர்ந்தார் கூற்று. பின் இயற்கைப்பொருள்களின் குணம் தொழில் முதலியன பஞ்சப் பொறிகளுக்குப் புலனாதல்கண்டு அவைகாரணமாகிய பெயர்களை அப்பொருள்களுக்கு இட்டு வழங்கினார்கள். இவ்வழித்தாய்ச் சொற்கள் காலகதியில் பெருகியனவாக மனிதர்தம் எண்ணங்களை இலகுவாகவெளிப்படுத்தத் தொடங்கினார்கள். ஆக, பாஷையும் உண்டாயது.

மனிதர்கள் வெவ்வேறுகாலங்களில் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு கூட்டங்களாக இருந்திருப்பார்கள். அவ்வக்காலங்களில் அவ்வவ்விடங்களில் அவ்வக்கூட்டங்களில் அவ்வப்பொருள்களுக்கு மேற்கூறியவகையாகப் பெயர்கள் கூறப்பட்டன. இதுபற்றியே பாஷை ஒன்றாகாது பலவாயது.

பாஷைகள் ஒவ்வோர் காலங்களில் உண்டாயினமைபற்றிச் சில பாஷைகள் முந்தியனவும் சிலபிந்தியனவுமாகும். இப்பொழுதுவழங்கும் பாஷைகளுள்ளே மிகப்பழமை வாய்ந்துள்ளன தமிழ் சம்ஸ்கிருதம், சீனம், அரபி, ஹீபுறு, கிறீக், லத்தீன் முதலியவைகளே. இவற்றுள்ளும் இன்றுவரை பேச்சுவழக்கிலிருப்பன தமிழ் முதலிய சில பாஷைகளேயாம்.

இத் தமிழ்ப்பாஷையானது, பிறிதொன்றன் கலப்புறாது தனித்து நடத்தற்கேற்ற சொற்கள் மலிந்துகிடக்கும் தூய்மையும் யாவரையும் வசீகரிக்கும் இனிமையும் பஞ்சலக்கணங்களும் நிரம்பப்பெற்றமையால் இலக்கணவரம்பும் பொருந்தியுள்ள ஓர் சிறந்த பாஷை என்பது பாஷைநூலாராய்ச்சி செய்தோர் யாவர்க்கும் ஒத்த முடிபாகும். இதுபற்றியன்றே,

> " கண்ணுதற் பெருங்கடவுளுங் கழகமோடமர்ந்து
> பண்ணுறத் தெரிந்தாய்ந்த விப்பசுந்தமிழேனை
> மண்ணிடைச் சிலவிலக்கண வரம்பிலா மொழிபோ
> லெண்ணிடைப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ."

*

என ஆன்றோரும் இதனைத்தெய்வத்தன்மையுடையதென உபசரித்துக் கூறினர் என அறிக.

இப்பாஷையின் நிலை உந்தநிலை இடைநிலை கடைநிலை எனமூன்றுவகையாகப் பகுக்கப்படலாம்.

சம்ஸ்கிருதபதங்கள் அதிகம் கலக்கப்பெறாத செந்தமிழ்நூல்கள் இயற்றப்பட்ட காலங்களைத் தமிழ்ப்பாஷை உந்தநிலையுற்றிருந்தகாலம் எனவும், சம்ஸ்கிருதத்திலிருந்து புராணங்கள் மொழிபெயர்த்துப் பாடப்பட்டகாலத்திலே தமிழ்ப்பாஷையோடு சம்ஸ்கிருதபதங்கள் அதிகமாகக்கலந்து அதன் செவ்வியை ஒருவாறு குன்றச்செய்தமையால் அக்காலத்தை இடைநிலைக் காலமெனவும், மகமதியர், போர்த்துக்கீசர் முதலிய வேற்றரசர் காலத்திலே, கற்பாரும் கற்பாரை ஊக்கிவிடுவாரும் இன்மையால், அது மிகக்குன்றியது பற்றி அக்காலங்களைக் கடைநிலைக்காலமெனவும் கூறலாம்.

ஆங்கில அரசினர் காலமாகிய பிற்காலத்தில் அவர்களுடைய பாஷாபிவிருத்தியினால் தமிழ் ஒருவாறு குன்றிவந்திருப்பினும் அது இந்தியாவிலும் யாழ்ப்பாணத்திலுமுள்ள ஆதீனங்களாலும் ஸ்ரீலஸ்ரீ: ஆறுமுகநாவலர் முதலிய வித்துவசிரோமணிகளாலும் நன்குவளர்க்கப்பட்டு வந்தது.

இப்பொழுது மதுரைமாநகரத்தின் கண்ணே, முன்னாள் முச்சங்கங்களையும் தாபித்துத் தமிழைவளர்த்துவந்த பாண்டிமன்னரே மீண்டும் அதனைவளர்க்குமாறு ஒருருக்கொண்டு வந்தார்கள் என்பதைத் தமது நாமத்தாலும் அரும்பெருஞ்செயலாலும் விளக்கிநிற்பவரும், பாலவனத்தம் ஜமீந்தாரும், செந்தமிழ்க்கலாவிநோதருமாகிய ஸ்ரீமாந்-பொ. பாண்டித்துரைத்தேவரவர்கள் செந்தமிழ்ச்சங்கம் நான்காவதொன்றை நிறுவி அதன்வாயிலாகச் செய்துவரும் செந்தமிழ்ப்பரிபாலனச் செயல் அறிஞரால் மிகவும் பாராட்டப்படத் தக்கதென்பதிற் சிறிதும் ஆக்ஷேபமில்லை. ஆதலால் பின் வேண்டப்படுவதாகிய குறையையும் நீக்கித் தமிழ்ப்பாஷையை நன்னிலையுறச் செய்யும் கடப்பாடுடையவர்களும் அவர்களேயாம்.

போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் காலங்களில் அவ்வவர் பாஷைகளை நம்மவர் கல்லாமைபற்றி அவை உலகவழக்கில் அதிகம் வாராதொழிந்தன. அதனால் தமிழ்ப்பாஷையில் அப்பாஷைக்கலப்பு அதிகம் உண்டாகவில்லை.

ஆங்கிலமன்னர் காலமாகிய இக்காலத்தில் மேற்கூறிய பெருந்தகையாளர்களது பரிபாலனச்செயல்களால் நந்தமிழ்ப் பாஷையானது ஒருவாறு நன்னிலையுற்றுவரினும் ஆங்கிலமொழிகள் நேர்ந்த நேர்ந்தவாறு கலக்கப்பட்டுவருதலாற் பெருங்குறைவை யடைகின்றது. ஆங்கிலமொழிகள் கலத்தற்குக்காரணமாயிருப்பன ஆங்கில அரசும் அத்தேசத்தாரோடு செய்யும் வாணிகமும் ஆங்கிலக்கல்வியும் அறிவிலாச்சனங்கள் தமக்கு மதிப்புண்டாமென்று கருதி அம்மொழிகளைத் தமிழோடுகலந்து பேசுதலும் அறிவுடையாரது சாவதானமின்மையுமேயாகும். இவ்விஷயத்திற் பெரும்பான்மையாகச் சாவதானமின்றி யிருப்போர் நம்பத்திராதிபர்களும் பத்திரிகைகளுக்கு விஷயதானஞ் செய்வோர்களுமே.

இன்னோர், ஆங்கிலமொழிகளுக்கு ஒத்த கருத்துடையனவாகச் செய்துகொள்ளப்படும் செந்தமிழ் மொழிகள் மலிந்திருப்பவும் "தண்டாமரையினுடன் பிறந்துந்தண்டேனுகரா மண்டுகங்கள்போல" ஆலசியமிகுதிப்பாட்டான் அவற்றைப்பொருட் படுத்தாது அவ்வாங்கில மொழிகளையே இருந்தவாறு பிரயோகித்துச் செந்தமிழ்ச் செவ்வியைக் கெடுத்துவிடுதலை நோக்குந்தோறும் அறிஞர் நாணுகின்றார்கள்.

பண்டைக்காலத் தமிழ்நூல்களில் வழங்கும் சொற்களெல்லாம் நம்மவரால் இப்பொழுது விரும்பிக்கற்கப்படுதல்போல இக்காலத்தவரால் வெளியிடப்படும் நூல்களிலும் வியாசங்களிலுமுள்ள சொற்களெல்லாம் பின்னுள்ளவர்களாலும் விரும்பிக் கற்கப்படவேண்டுமன்றே!

ஆதலால் நம் பத்திராதிபர்களும் விஷயதானஞ்செய்வோரும் தத்தம் வியாசங்களிலே அந்நிய பாஷைச்சொற்களை நீக்கிச் செந்தமிழ்ச் சொற்களையே பிரயோகித்துச் செந்தமிழை நன்னிலையுறச்செய்யவேண்டுமென்பது ஒருதலையாக வேண்டப்படுவதொன்று.

ஆங்கிலபாஷைச் சொற்களைப் பிரயோகித்தலால் வருங்கேட்டைக் குறித்துச் சில கூறுதும்.

க-வது. பழைய நூல்களில் உள்ளசொற்கள் வழக்கிறந்துபோக அவற்றாற் குறிக்கப்படும் பொருள்களும் பழக்கவழக்கங்களும் மாறுதலடையும். இப்பொழுது பூமியிற்காணப்படும் அடுக்குப்பாறைகளிலுள்ள புல்லினம், மீனினம், சங்கினம் முதலிய புதைபொருட்கள் உலகத்தின் காலத்தையும் தாவரசங்கமங்கள் ஒன்றின்பின் ஒன்று தோன்றியழியும் தன்மைகளையும் ஊகித்தறிதற்கு அறிகுறிகளாக நிற்றல்போல அவ்வக்காலப்பழக்க வழக்கங்களை எத்துணைக்காலஞ் செல்லினும் அழியாதுகாட்டும் ஞாபகத்தம்பங்களாக நிற்பன சொற்களே என்க. கண்முதலியவற்றால் இயற்றப்பட்ட ஞாபகத்தம்பங்கள் இயற்கைச்சலனங்களால் அழிதலுங்கூடும். சொற்களோ என்றும் அழியாது நிலைபெறுந் தன்மையுடையனவாகும்.

இப்பொழுது தமிழ்ப்பாஷையிலே அருகிவழங்கும் கிராம்பு, பாதிரியார் சுமார் முதலிய திசைச்சொற்கள் அவ்வக்கால வேற்றரசுகளையும் வாணிக நிலையையும் நன்குபுலப்படுத்திச் சரித்திர ஆராய்ச்சிக்கு எல்லையாக நிற்றல்போல இப்பொழுதை அரசினர்நிலையையும் வாணிகநிலையையும் பின்னுள்ளோர் அறிதற்கு எல்லையாக நிற்றற்பொருட்டுத் தமிழில் ஒத்தகருத்துடைய வல்லாத சில சொற்களை மாத்திரம் இன்றியமையாமைகண்டு வழங்குதல் குற்றமாகாதாயினும், அவற்றை நேர்ந்தவாறு பிரயோகித்தல் சிறிதும் பொருந்தாததொன்றென்க.

உ-வது. சொல்லின்பொருளை உள்ளவாறுணராமையால் அறிவு விருத்தியில்லாது போதல். இதற்கு உதாரணமாக ஒன்றுகூறுதும். "வைசரோய் ஆப் இன்டியா" (Viceroy of India) என்பதை இருந்தவாறே வழங்குமிடத்து லத்தீன் அறிவில்லாது ஆங்கில அறிவுமாத்திர முள்ளவன் அதன் தாதுப்பொருளை உணராமையால் வாளா இந்திய தேசாதிபதி என்னும் பொருளையே உணர்ந்துகொள்வன். இவன் கதி இங்ஙனமாகும்போது ஆங்கிலபாஷையுமுணராத ஏனையோர்கதி எங்ஙனமாகும் என்பது உற்றுநோக்கத்தக்கது. "இந்தியபிரதிகாவ

லர்" என மொழிபெயர்த்துக்கூறின் அது "பிரித்தானிய அரசரு க்குப் பிரதியாக இந்தியாவை ஆள்பவர்" என்று அதன் உண்மைப் பொருளை நினைக்கச்செய்து அதன் வாயிலாக மற்றைய எண்ணப்பு ணர்ப்புக்களையும் உண்டாக்கி அறிவை விருத்திசெய்வதற்கு ஏதுவா குமன்றோ!

ஙு-வது. தமிழ்ச்சொற்களோடு ஆங்கிலச்சொற்களையும் கலந்து பேசுதலைமாத்திரமன்றி நூல்களில் எழுதியிருத்தலையும் அறியுமிட த்துப் பிறசாதியார் இது கிரம்பாப்பாஷை என்று குறைகூறுதற் கும் பிழையாக உச்சரிக்கப்படுகின்றன என்று நகையாடுதற்கும் இடமுண்டாமன்றோ!

இனி இக்குறையை நிறைவாக்குதற்குச் செய்யத்தக்கது யா தென்று ஆராய்வோமாக.

இக்காலத்திலே தத்துவசாஸ்திரக்கல்வியே பெரிதும்வேண்டப் படுதல்பற்றி ஆங்கிலபாஷையிலிருந்து நூல்களை மொழிபெயர்க்க நேரிடும். அவ்வாறாகிய சமயங்களில் ஆங்கில மொழிகளையே வழங் காது ஒத்தகருத்துடையனவாகிய தமிழ்ச்சொற்களை வழங்குதலே முக்கிய நோக்கமாக இருத்தல்வேண்டும். ஒத்தகருத்துடையசொற் கள் இல்லாதவிடத்து, பொருள்களின் குணம் தொழில் முதலிய கா ரணம்பற்றி, தனிமொழிகளையாவது தொடர்மொழிகளையாவது செ ய்துகொள்ளல் உத்தமமாகும்; வேண்டுமாயின் பயின்றுவந்த வட மொழிகளையும் வடமொழி உபசர்க்கங்களையும் அநுசரித்துச் சொல் லியற்றுதல் தவறாகாது. இவ்வாறு செய்தலே பாஷை வளர்ச்சிக் கும் காரணமாகும். என்னை? விஷயமுகத்துக் கூறியவாறு பெயர் கள் எல்லாம் ஆதியில் காரணம்பற்றியே இடப்பட்டுப் பெருகியன வாதலின். அவற்றுள்ளே காரணம் தெரிந்தன காரணப்பெயராகவும் தெரியாதன இடுகுறியாகவும் பிற்காலத்திற் கொள்ளப்பட்டன.

இவ்வாறு மொழிகளைச்செய்துகொள்ளுதலும் முற்றாக இயலா தவிடத்து ஆங்கிலமொழிகளை இருந்தவாறு பிரயோகித்தல் குற்ற மாகாது.

நம் தமிழ்ப்பாஷை தன் செவ்விகுன்றப்பெறுது நன்னிலையுற வேண்டுமென்னும் பேரவாவினுல். இவ்விஷயம் எழுதப்பட்டதேயன்றி ஒருவரைக் குறைகூறும் நோக்கத்தானுக வாதஞ்செய்யும் நோக்கத்தானுக எழுதப்படவில்லை என்பதைப் பெருந்தகையாளர்கள் உணர்ந்துகொள்வர்.

ஆதலினுல், நம்பத்திராதிபர்களும் விஷயதாதாக்களும் ஆசிரியர்களும் பாஷாபிமானிகளும் பிறரும் ஆங்கிலமொழிக்கலப்பால் நம்பாஷைக்குநேரும் குறைகளை உய்த்துணர்ந்து நம் வேண்டுகோளை உள்ளத்துக்கொண்டு நம்மறிவிற் கெட்டியவாக மேற்கூறிய சில உபாயங்களானுவது தமது பன்னூலாய்ந்த நுண்ணுணர்விற்பட்ட வழிகளானுவது, அக்குறையை நிறைத்துத் தமிழ்ச் செவ்விவாய்ப்ப உழைப்பார்கள் என்பது எமது திண்ணம்.

அ. பொன்னையாபிள்ளை,
சிக்ஷோபாயதரிசகர்.

---

உ

திருச்சிற்றம்பலம்.

# சிதம்பரசுவாமிகள் சரிதம்.

இப்புலவர் பெருந்தகையாரது சிறந்த சரிதமொன்றைச் செந்தமிழ்ப் பிரதியின்கண், வெளியிடவேண்டுமெனப் பலகால் முயற்சித்தும், "திருப்போரூர் சந்நிதிமுறை" "புலவர்புராணம்" இவைகளிலன்றித் தக்க ஆதாரவுகளோடு கூடிய சரிதப்பிரதிகள் கிடைப்பது அருமையாகவே முடிந்தது. மேனுட்டு நாகரீக வைரம்பற்றிய ஆங்கிலக் கவிகளது சரிதமுறைகள் தெள்ளிய காலவரையறையோடு கூடிக் கிடைப்பதுபோல், நமது நாட்டுக்கவிஞர்களது சரிதங்களகப்படுவது மிகுந்த பிரயாசையாகவே யிருக்கின்றது. காரணம், நமது தமிழ்மக்கள் சரிதப்பிரவிர்த்தியில், பரிசீலனையில்லாக்குறைவென்றே கருதவேண்டும். தமிழணங்கு தழைத்தோங்கும் வகையில் நம்மனோர் ஊக்கமும் கவலையும் கொண்டாலன்றி இத்தகைய குறைகள்

நம்மைவிட்டொழிவது வருத்தமாகவே முடியும். ஆனால், இக்குறைகள் முற்றும் நம்மைப் பாதித்ததாயில்லை. ஆங்காங்கு அறிஞர் பலர்தோன்றி நந்தமிழ்ப் பெரும்புலவர் சரிதங்களைப் போதியபிரமாணங்களோடு காலநிர்ணயத்துடன் வெளியிட்டும் வருகின்றனர். இதுகாறும், இம்முயற்சியால் வெளிவந்த சரிதங்கள், ஔவையார், ஒட்டக்கூத்தர், கம்பர், புகழேந்தியார், பொய்யாமொழியார், ஏகம்பவாணர் மற்றும் சில புலவர்களுமாம். மதுரைச் "செந்தமிழ்" வாயிலாக வெளிவந்த இப்புலவர் வரலாறுகட்கும், விநோதரஸமஞ்சரி, புலவர்புராணம், பாவலர்சரித்திரதீபகம், செந்தமிழ் நாவலர் திவ்ய சரிதை முதலிய நூல்களிற் கண்ட புலவர் சரிதங்கட்கும், எத்தனையோ மாறுபாடுகளும், பாடபேதங்களும், உள்ளனவென்பது அதனைப்படித்தாரே அறிந்துணரத்தக்கதாம். நமது நாட்டிற்கண்மணி போல் விளங்கிய கவிஞர் சிகாமணிகளது அழகிய சரிதங்களை நன்குகப் பரிசீலனைசெய்து வெளியிடுவதை நாம் படித்துணருவதால், அவர்களிடம் நமக்குக்கௌரவாபுத்தி, அதிகமாதலோடு ஜனஸமூக வாழ்வை உயர்வும், ஒழுங்கும் பெறச்செய்வதற்கும் அதுமுக்கிய ஏதுவாமென்பது புலனும். செந்தமிழறிஞர்பலர், இன்னம் வெளியாகாதுள்ள எத்துணையோ பழம்புலவர் அரும்பெருஞ் சரிதங்களை நந்தமிழகத்தோர் கண்டுவக்குமாறு மாதந்தோறும், வெளியாகும் "செந்தமிழ்ப்பத்திரிகை"யின்கண், வெளியிட்டுபகரிப்பது சிறந்த நன்மையாம். இது விஷயத்தைப்பற்றி இன்னம் பேசப்புகின் விரியுமென்றஞ்சி, இம்மட்டோடு நிறுத்தி எடுத்துக்கொண்ட விஷயத்தை இனித்தொடங்குவாம்.

சிதம்பரகவிராயரின், வரலாறு முழுமையும் நாம் ஒழுங்காக அறிந்து மகிழ்தற்கிடமில்லையாயினும், திருப்போரூர் சந்நிதிமுறையென்னும் நூலிலும், புலவர்புராணத்திலும் காணப்படும் சில முக்கியமான செய்திகளைவைத்து நாம் ஒருபடியாகக் காணக்கூடும். ஒப்புயர்வற்ற திப்பியமக்களின் குணஞ்செயலாதி விசேடங்களை நாமறிந்து கொள்வதால் அன்னாரின் அருமைபெருமைகள் நமக்கு இன்பத்தை விளைக்கத்தக்கனவாகின்றன. உத்தமப்புலவராகிய சிதம்பரசுவாமிகளின் சிறந்த சரிதம் எவரும் விரும்பிப்படித்தற்கு ஏற்றதாகவி

ருந்தும் தகுதியான ஆதாரவோடில்லாத காரணத்தால் கர்ணபரம்பரைச் செய்தியாயுள்ளதெனக்கருதும் ஒரு குறையாகமட்டும் நின்றது. இருப்பினும் அது, சிதம்பரசுவாமிகளது உயர்ந்த பத்திநெறியையும், விரிந்த கருணைத்திறனையும், பெருங்குணங்களையும் விளக்கி நிற்பதாம். சுவாமிகளது மரபைப்பற்றிக்கூறவந்த சந்நிதிமுறையும், புலவர்புராணமும் ஒன்றுக்கொன்று வேறாக புலவர்மரபினரென்றும், வேளாளமரபினரென்றும், முரண்படவிருப்பதால், பெரிதும் ஐயம் நிகழ்தற்கேதுவாயின. ஆதலால் எம்மரபினராயினுமாகுக. இனிச் சிதம்பரபுலவர் வரலாறு வருமாறு:—

கருணையங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்களுய்தற்பொருட்டு அன்புடன்புரிந்த வெட்டெட்டுத் திருவிளையாடலும் நிகழ்ந்த பாண்டிவளநாட்டின் நலநகராய மதுரைமாநகரின்கண்ணே முன்னையோர் செய்தவப்பயனாகவந்த சிதம்பரகவிராயர் என்னும் அபிதானமுடையார் இளமையிலேயே கலைவாணி இன்னருள் சுரந்துவப்ப, இலக்கியவிலக்கண வேதாந்தசாஸ்திரங்களில் வல்லுநராகிப் பரிபக்குவமடைந்து புண்ணியப்பயனாகக்கிடைக்கின்ற திருவருட்சித்தியையும், சிவஞானத்தையும் பெறவேண்டுமென்னும் அவாவால், நல்லாசிரியனையடைந்து நல்லுபதேசம் பெறும்பொருட்டுப் பல சிவதலங்களைத் தரிசித்துக்கொண்டு "நினைக்கமுத்திதரும்" விருத்தாசலத்தையடுத்துப் பெருமானைத்தொழுது "குமாரதேவர்" என்னும் பெரியாரைக்கண்டுவணங்கி அவர்பாலன்புடையாராகி அவரோடு சிலநாளங்கு வசித்திருந்தனர். இங்ஙனமிருப்ப ஓர்நாள் சிதம்பரசுவாமிகள், ஆசிரியரைவணங்கி என்பால் திருவருட்சிறப்பு விளங்கும்படிசெய்து என்னைச்சீடனாக அங்கீகரித்தருள்வீராகவென வேண்டலும், குமாரதேவர் உளமகிழ்ந்து தன்னை அடிமைகொண்ட சிறந்த ஆசிரியரான சாந்தலிங்கசுவாமிகளது சன்னிதானத்திலே சேர்க்கப்படவேண்டுமென்னுங் கருத்துடன் கொங்குநாட்டினில் முதன்மைபெற்றதும், சமயகுரவருள் வன்றொண்டராகிய நம்பியாரூரரால் * பாடல்பெற்றதும், ஆதிபுரி, ஞானக்கோமுத்தி, பட்டி, தென்கயிலை, பிறவாநெறி,

* இத்தலம்பாடல் பெற்றுள்ளதென்பதைச் செந்தமிழ்த் தொகுதி-௩. பகுதி-௫. பக்கம்-உ௫௫-பார்க்க.

பிப்பிலாரண்ணியம் ஆதியசிறந்த காரணப்பெயர்களைக்கொண்டதும், பிறவாப்புளி, இறவாப்பனை, காஞ்சிமாநதிமுதலிய விம்மிதங்களுடையதும், மேலைச்சிதம்பரமுமாகிய திருப்போரூரைத்தாம் வதிவதற்குகந்த உறைவிடமாகக்கொண்டுள்ள தமது ஞானகுருவிடம் சிதம்பரப்புலவரை அழைத்துவந்து பரிணமத்திற்புகுந்து புறங்காத்திருந்தனர். ஒடுக்கத்தினின்றும் வெளிப்போந்த † சாந்தலிங்கசுவாமிகள், இருவரையுநோக்கி மீண்டுள்ளே எழுந்தருளித் தாமியற்றிய "வைராக்கியசதகம்," "வைராக்கியதீபம்," "அவிரோதவுந்தியார்," "கொலைமறுத்தல்" முதலிய நான்கு நூல்களையும், ¶ கண்ணுடைய

---

† சாந்தலிங்கசுவாமிகள் திருப்போரூரிலேயே தமது வாணாள்முழுதினும், திருமடங்கொண்டிருந்து பல அன்பர்கட்கு நல்லுபதேசஞ்செய்து ஆட்கொண்டருளி "ஸதேஹமுக்தி"யடைந்தனரெனச் சிறந்த மேதாவிகளாலும், கர்ணபரம்பரையாலும், சுவாமிகள் சரிதத்தாலும் நன்கு அறியப்படுகின்றது. அன்றியும், அத்திருமடம் இன்றும் தக்கபடி பரிபாலிக்கப்பட்டுன்னத நிலையிலிருந்துவருவது பிரத்தியக்ஷமாம். இங்ஙனமிருக்கத் "திருப்போரூர் சந்நிதிமுறை" ஆசிரியவரலாற்றில்மட்டும், "திருப்புக்கொளியூரென்ற அவிநாசியில் திருமடங்கொண்டிருந்த சாந்தலிங்கசுவாமிகளிடத்துக் குமாரதேவர் சிதம்பரப்புலவரை அழைத்துவந்து தரிசனம் செய்துவைத்தாரென" காணப்படுகின்றது. இது முற்றிலும் பொருத்தமற்றதும், ஆதாரங்கெட்ட விஷயமென்பதும் உணர்க. சாந்தலிங்கசுவாமிகள்மடம் அவிநாசியில் ஒருகாலத்திலுமிருந்ததில்லை. திருப்போரூரிலிருந்தாரென்பதற்குச் சிலபிரமாணங்கள் உள்ளன. அவைவருமாறு :—

"கொங்குவள நாட்டினிடை
மேலைச் சிதம்பரமா மிக்கபுகழ்ப் பேரையினிற்
சீலத்தாற் போற்றத் திருமடஞ் செய்தற்றனே."
(சாந்தலிங்கசுவாமிகள் சரிதம்)

"நீரைச் சென்னியில் வைத்துள்ளாரை நினைத்து நீறணிவார்கள்வா
ழூரைத் தம்மடைப் பள்ளியா விழைந்துண்டு சிற்சிலநாளினிற்
பேரைத் தொல்பதி கண்டங்குற்ற பெருந்தகைக் குரவன்........."
(சிதம்பரசுவாமிகள் சரிதம்)

"அத்தேயம் விட்டு மனையாதி யாகுமவர்தம்மை நீங்கியகமூ
டுத்தேச மானபடி நற்குருக்க ளுறல்பேரையென்ன... ....."
(குமாரதேவர் சரிதம்)

¶ கண்ணுடையவள்ளலாரென்பவர், சீகாழித் திருஞானசம்பந்தசுவாமிகளிடம் விசேஷபக்தியுடையராய் அருள்பெற்ற ஒருமகான். வேதாகமசாஸ்திரக்கொள்கைகளில் தெளிவுடையர். சற்குருமூர்த்தியின் திருவருள் நோக்கத்தாற்பெற்ற ஞானக்கண்ணுடையவரும், தாம்பெற்ற அறிவுவளத்தைப் பிறர்க்கு அருள்பவருமாதலால், இவர்க்குக் கண்ணுடைய வள்ளலாரென்னும்பெயர் அமைந்ததென்பர்.

*

வள்ளலார் இயற்றிய "ஒழிவிலொடுக்க"த்தையும் கொண்டுவந்து தரிசனந்தந்து குமாரதேவரைப்பார்த்து "முன்னம் நாம் உமக்கு உபதேசித்த பஞ்சாக்ஷரத்தை இவனுக்கு உபதேசித்து நின்மாணுக்கனுக்கிக்கொள்கவென்று கட்டளையிட்டு, பரிபாகமேலிட்ட இவ்விளவலைக்கொண்டு இந்நூல்களுக்கு உரையியற்றுவிக்கக்கடவை" எனமொழிந்து அந்நூல்களைத்தந்தருள, அவற்றைக் குமாரதேவர் இருகையினுமேற்றுக் கண்களிலொற்றிக்கொண்டு சிதம்பரசுவாமியரிடத்திற்கொடுக்க, அவரும் அவைகளைப்பெற்றுச் சிரமேற்கொண்டு வணங்கி அவருடன்சென்று விருத்தகிரியை அடைந்தனர்.

பின்பு சிதம்பரசுவாமிகள் வீராகம உத்தரசைவ சித்தாந்த நிருபணமாகிய வீரசாமானியாதி தீக்ஷையை விதிப்படி யநுக்கிரகிக்கப்பெற்று அங்கயோகங்களையு முணர்ந்து ஞானோபதேசஞ் செய்யப்பெற்று ஞானசமாதி கூடியிருக்கையில், ஒருநாள் மயில் ஒன்று தோன்றிச் சொரூபத்தைச் சிறகால்மறைத்து நிருத்தஞ்செய்ய அதனைக் கண்டு ஆசிரியரிடத்திற்சென்று விண்ணப்பஞ்செய்தனர். அதுகேட்டுக் குமாரதேவர், "நம்மையிங்கு பெரியநாயகியார் ஆட்கொண்டுயிர்த்துணையாய் நிற்கின்றபடி உனக்கும் உயிர்த்துணையாய் நிற்கின்ற அங்கயற்கண்ணம்மை அதனைப்புலப்படுத்தும்," என்று விடைதந்தனர். ஆசிரியரருள்வாக்கின் ஆணைப்படியே சிதம்பரசுவாமிகள், சோமசுந்தரக்கடவுள் திருக்கோவில்கொண்டருளிய $ ஆலவாயினைய

---

$ மதுரைமாநகரத்தின் பழைய எல்லையை அறிவித்தருள வேண்டுமென வேண்டிய வமிசசேகரபாண்டியனுக்குச் சோமசுந்தரக்கடவுள் தன் கையிற் கங்கணமாக அணிந்துள்ள நாகத்தைநோக்கி 'நீவரையறுத்துக்காட்டு' என்று கட்டளையிட, அது தன் வாலும்வாயும் ஒன்றுபடும்படி உடம்பு வளைந்து அந்நகரைச் சுற்றிநின்று அதன் எல்லையைக்காட்டியதனுல், மதுரை ஆலவாய் என ஒருபெயர் பெற்றது; இதனைத் திருவிளையாடற்புராணத்துத் திருவாலவாயான படலத்தினுல் அறிக. ஆலவாயென்னுஞ் சொல்லுக்கு விஷத்தை வாயிலுடையதென்பது பொருள்.

**வமிசசேகரபாண்டியன்.** ஆலாசியமான்மியப் பாண்டியராசவமிச வழியிற்கண்ட குலசேகரபாண்டியன்முதலாகி, மலயேசுரபாண்டியன் இறுதியாகக்கூறும் எ௬-பாண்டியர்களில், வமிசசேகரபாண்டியன் ௪௬-வது பாண்டியனுகின்றுன்; இவன் வமிசசேகர மகனுவன். தனது ஆட்சியில் மிலேச்சர்களையும் துருக்கர்களையுந் தொலைத்தவன். மூன்றுஞ்சங்கப் புலவர்களாகச் சரஸ்வதியின் அவதாரம்:—கபிலர், பரணர் முதலாயினேரும், விக்கிரமசோழனும் இவன் காலத்தினரே.

டைந்து நாற்பத்தைந்துநாள் வரையில் நாடோறும், பொற்றாமரை
யில் மூழ்கி, நித்தியகருமானுஷ்டானங்களை முடித்து, மத்தியானகாலத்
தில் ஒருபிடி பச்சறுகும், மூன்றுகைத்தீர்த்தமும் உட்கொண்டு நிஷ்
டைசாதித்திருக்கையில், தேவியார் சோதனைநிமித்தம் நேரும்படிசெ
ய்த சுரம், கைகாற்பிடிப்புமுதலிய நோய்களுக்கு அஞ்சாமலும், மன
நிலைகலங்காமலும் விரதந்தவறாமலும் நின்று, மீனாக்ஷியம்மையை
நோக்கிக்“கலிவெண்பா”என்னுமோர் தமிழ்ப்பிரபந்தம்பாடித் துதித்
தனர். தேவியார் திருவுளமகிழ்ந்து எதிர்வந்து அப்பிணிகளுடன் மல
ப்பிணியும் நீங்குமாறு தமது மலர்க்கரத்தாற்றடவி” இப்பதிக்குவட
பால் முப்பதுயோசனைதூரத்திலே *“போரூர்”என்னும் சுப்பிரமணிய
க்ஷேத்திரமொன்று முன்பு ஆறுதரம் பிரசித்தியாயிருந்து இப்போது
ஜீர்ணப்பட்டிருக்கின்றது; அது ஏழாந்தரம் உன்னாலே ஜீர்ணோத்தா
ரணமாய் நிலைபெற்று விளங்கவேண்டுவது. ஆதலால், அக்கடவுள்
உனது நிஷ்டானுபவத்தில் மயில்வடிவாய்வந்து சொரூபத்தை மறை
த்து நின்றனர். அக்கடவுளே உனது குருவடிவாய் எழுந்தருளித்
தரிசனந்தந்து, மேல் உண்மையை விளக்கும். நீ இது போழ்தே
அத்தலத்திற்குச்செல்க” எனத்திருவுளம்பற்ற அம்மையாரின் இன்
பம் ததும்பிய அருட்டிறத்திற்கு வியந்து ஆனந்தபரவசராய்க் கட்ட
ளையைச் சிரமேற்கொண்டு வணங்கி ‘யுத்தபுரி’ என்னும் திருப்போ
ரூர் நோக்கி வருவாராயினர்.

அந்நாளிற் ஜீர்ணமுற்றுப் பனங்காடாகிப் பலவகைக்கொடி செ
டி மரங்களாலும் அடர்ந்திருந்த திருப்போரூரில், ஓர் பெண்பனை
மூலத்தில், ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுள் புற்றிடங்கொண்டு வீற்றிருந்
தனர். அக்காட்டின்கணுள்ள பனைகளின் பலன்களால் ஜீவனஞ்
செய்துவந்த சான்றார்களுளொருவன், ஒருநாள் அப்பெண்பனைநன்
றாய் ஓங்கிவளர்ந்து ஓலைக்கோர்பனையாக அரும்பி விசேஷித்திருந்த
தைக்கண்டு அதனைச்சூழ்ந்திருந்த ஊனங்கொடிகளைக்களைந்து, பாளை
களைச் சிக்கறுத்துக் குடங்களையவற்றினுட் புகுத்தி மதுவின் பய

* போரி—போரூர் என்பதன்மரூஉ; அது, முருகவேள் அசுரருடன் போர்செய்ததலமெனப்படும்; இதற்கு ‘ஸமரபுரி’ என வடமொழிப்பெயர் வழங்குவர். இது: தொண்டைநாட்டில் திருவான்மியூர்க்குத் தெற்கே கடற்கரையிலுள்ள சுப்பிரமணியஸ்தலம்.

னைக்கைக்கொண்டு விசேடப்பிரயோஜனம் பெற்று, அன்று மாலைப்போழ்தில் வந்துபார்க்கையில், முன்போலவே மரம் கொடிகளால் மூடப்பட்டிருக்கக்கண்டு, அவற்றையும் அறுத்து மதுவின்பயனைக் கைக்கொண்டனன். இவ்வாறு அதிகரித்துச் சுற்றிக்கொள்ளுகின்ற கொடிகளை நாடோறும் களைவதால், வருத்தமுற்று அவற்றைவேருடன் களைய எண்ணிச் சிலருடன் கருவிகளைக்கொண்டு கொடிகளைக் களைந்து பருத்துக்கீழேயுருவியோடிய அடிவேரைப்பற்றி வெட்டுகையில், புற்றில் திருமேனிமறைந்துள்ள சுயம்புவின்மேல் வாள் தாக்கப்பட்டுச் சிவப்புண்டாக, சான்றான் முதலியோர் மூர்ச்சையாய் விழ்ந்தனர். அதுகண்ட பிறனொருவன் அயலில் மரமேறிக்கொண்டிருந்தவர்களுக்குத் தெரிவித்துப் பெண்பனையின் அடியை நன்றாகச் சோதித்துப்பார்க்கையில், புற்றினுட் சுயம்புவைக்கண்டு அஞ்சிப் பத்திமேலிட்டு முருகக்கடவுளைத் தோத்திரஞ்செய்ய, மூர்ச்சையாயினார் தெளிந்தெழுந்தனர். அதுமுதலாக அவ்வூர்ச்சான்றார் தமக்குள்ளே ஏணிக்கோர் பெரியபணம் வாங்கிப்பூசை முதலியவை நடத்திவரும்படிக்குச் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி ஆதிசைவர் ஒருவரைக்கொண்டு திருமஞ்சனமுதலிய செய்வித்துக் கற்பூராலத்திகள் செய்விக்கையில், அதைச்சூழ்ந்த ஊரும் அந்நாளில் இயற்றிய கூரைக்கட்டடமாகிய புற்றாலயமும் பற்றிக்கொண்டன. அதுகண்டு யாவரும் ஆச்சரியமும் பயமுமடைந்திருந்தனரென்ப.

(தொடரும்.)

சி. கு. நாராயணசாமி முதலியார்.

---

உ

# நல்லொழுக்கம்.

---

## ஆறும் அதிகாரம்.

[ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

முரட்டுக்குணமானது கெட்டகுணமாயிருக்கவேண்டுவது அவசியமன்று. ஆனால், குணம் எவ்வளவிற்குப் பலமாகின்றதோ, அவ்வளவிற்குத்தன்னை ஒழுங்குபடுத்தி அடங்கும்படிசெய்வது அவ

சியமாகின்றது. மனிதர்களுக்கு வயது அதிகரிக்கவே, குணமும் நன்மைப்படுகின்றது. அனுபவமும் விருத்தியடைகின்றது. ஆனால் இஃது அவர்களுடைய ஆழநீளமானதும், உதாரத்துவமானதுமாகிய பிரகிருதியைப் பொறுத்திருக்கின்றது. மனிதர்கள் குற்றங்களைச் செய்தபின்னர், தாங்கள் நடந்துகொள்ளுகிறவிதத்தால் தங்களைக் கெடுத்துக்கொள்ளுகிற அளவிற்கு, செய்தகுற்றங்களாற் கேடடைவதில்லை; புத்திசாலிகள் அவைகளால் உண்டாம் துன்பங்களாற் பயன்பெற்று இனி மேலைக்கு அவற்றை நீக்கிவிடுவர். ஆனால் அனுபவத்தாற் பக்குவப்படாதவர்களுமுளர். அவர்கள்காலம் செல்லச்செல்ல மிகவும் அற்பத்தனமும் வெறுப்புடைமையும், துன்மார்க்கமுமுள்ளவராக வளருகின்றனர்.

ஓர் இளைஞனிடத்திலுள்ள முரட்டுத்தனமாவது பக்குவப்படாமலுள்ள மிகுந்த ஊக்கமெனப்படுகின்றது. அதற்கு மார்க்கமானது செவ்வையாய் ஆக்கப்பட்டிருப்பின் உபயோகமான காரியத்தில் அது பிரவிர்த்திக்கும். ஐக்கியமாகாணத்தில் பிரதாபசித்திபெற்றிருந்த ஒரு பிரான்சுக்காரனாகிய, ஸ்டெப்பன் ஜெரார்டு (Stephen Gerard) என்பவன் ஒருகணக்கன் முரடனாயிருக்கிறானென்று கேட்டபொழுது அவனை உடனே தன் வேலைக்குள்வைத்துக்கொண்டு ஓர் அறையில் தனியே வேலைசெய்யவைப்பான், என்று சொல்லப்பட்டிருக்கிறான். அப்படிச்செய்வதில் அவனுடைய அபிப்பிராயம் யாதெனில் அப்பேர்ப்பட்டவர்கள் சிறந்த வேலைக்காரரென்பதும், அவர்களுக்குச் சண்டைக்கு இடங்கொடாதவிஷயத்தில் அவர்கள் ஊக்கசக்தியானது வேலையிலேயே பிரவிர்த்திக்குமென்பதுமாம்.

முரட்டுத்தனமென்பது, முரண்டும் கோபமூட்டத்தக்கதுமான சித்தம் என்றுதான் பொருள்படலாம். அது அடக்கப்படாவிடிற் சஞ்சலமான கோபச்சச்சரவுகளிலே வெளிப்படுகின்றது. ஆனால் ............என்னும் கருவிகளால் முறைபட்டு ஆளப்படுவதால் உபயோகப்படுகின்ற புகையந்திரத்தின் ஒழுங்கான சூட்சத்தில் அடைபட்ட புகையைப்போல ஆண்டு அடக்கப்பட்டால் ஊக்கமுள்ளசக்திக்கும் உபயோகத்திற்கும் காரணமாகப் பலிக்கலாம். ஆதலாற் சரித்திரத்திற் சொல்லிய சில பிரதாபவான்கள் முரட்டுக்குணமுடை

யவர்களாயிருப்பினும், தங்கள் கருத்தைக் கண்டிப்பான ஒழுங்கி னுள்ளும் ஆளுகையினுள்ளும் அடக்கிவைக்கும்படியான பலத்ததீர் மானசித்தத்தையும் உடையவராயிருந்தனர்.

ஸ்ட்ரேபோர்டு (Strafford.) இன் கீர்த்திபெற்றபிரபுவானவர், மிகவும் கோபமும் முரட்டுத்தனமுமுள்ளவராயிருந்து, தன்கெட்ட குணத்தை அடக்குவதற்குத் தமக்குள்ளேயே முயன்று போராடிக் கொண்டிருந்தனர். அவருடைய குறையைப்பற்றி அவருக்குச்சொல் லி அதற்கு இடங்கொடாமலிருக்கும்படி எச்சரிக்கும்படிக்கான உண் மையுள்ளவராயிருந்த, தன் இஷ்டர்களில் ஒருவராகிய பழைய செக் ரட்டேரியாகிய, 'கூக்' (Cooke) என்பவரின் புத்திமதியைக்குறித்து அவர் எழுதியது வருமாறு: "பொறுமையாயிருக்கும் நல்லபுத்திமதி யை நீர் எனக்குக்கொடுத்தீர். உள்ளபடியே யென்னுடைய வயசும் எனக்கு இயல்பானமனப்போக்கும் மட்டுக்குமிஞ்சிய உஷ்ணத்தைக் கொடுக்கின்றன. ஆகிலும் அதை இன்னும் அதிக அநுபவமானது குளிரப்பண்ணலாம். சமயத்தில் நான்தானே என்னைக்காத்துக்கொ ள்வதானது அதை முற்றும் ஜயிக்கலாம். மத்தியில் என் உண்மை யான விருப்பமானது கண்யதைக்கும் நீதிக்கும், என் எஜமானுடைய நயத்திற்குமாயிருக்கிறபடியால், இந்தமட்டிலாவது அது மன்னிக்கத் தகுதியுடையதாகலாம். துன்மார்க்கத்திற் பிரயோகிக்கப்பட்டகோ பந்தான் குற்றம் சாட்டும்படியான பாபமுள்ளதும் இடங்கொடுத்த வர்களுக்குக் கெடுதலையுண்டாக்கக் கூடியதுமாகின்றது. மற்றப் படி கோபம் எப்பொழுதும் அப்படியன்று.

கிராம்வெல் (Cromwell.) என்பவருங்கூட இளமைப்பருவத் தில் மனப்போக்கிற்செல்பவராயும் முரட்டுக்குணமுடையவராயும், துர்க்குணமும், அடக்கத்தகாமையும், மேல்மனுஷரில்லாமையும் உ டையவராயும் பற்பலவாலிபச்சேஷ்டைகள் உண்டாதற்குக்காரண மாகிய மிகுந்த இளம் பிராயத்தின் ஊக்கமும் உடையவராயும் இரு ந்ததாகச்சொல்லப் பட்டிருக்கிறார். அவர்தன் சொந்த நகரத்தில் ..........என்னும் கீர்த்தியையடைந்து கெட்டவழியிற் சீக்கிரம்சே ரும் தன்மையாராகத் தோன்றினார். அப்பொழுது மதமானது, தன துமிகவும் கண்டிப்பான அநுஷ்டானங்களில் அவருடைய முரட்டுக்

குணத்தைப்பற்றிக் கால்வின் (Calvin) மதத்தின் கடுமையான நிலைக்குட்படுத்தினது. அவருடைய ஊக்ககுணத்திற்கு இவ்வாறு முற்றிலும் புதியபோக்கானது, கிடைத்து அது பொதுஜன காரியஸ்தனுவதற்குரிய மார்க்கத்தை உண்டாக்கிக்கடைசியில் இங்கிலாந்தில் கிட்டத்தட்ட இருபதுவருஷகாலம் மேலான அதிகாரத்தை உண்டாக்கிற்று.

நேசௌ (Nassaw) வம்சத்தின் சுத்தவீரரான அரசர்கள், தன் அடக்கம், தன்னயமறுப்பு, உறுதிப்பட்ட நோக்கமாகிய அதேகுணங்களுக்கு எல்லாரும் பேர்ப்போனவர்கள். மௌனமான உவில்லியம் (William the silent) என்று பெயர்வந்தது அவர் பேசாமலிருந்ததினாலன்று. ஏனென்றால் அவர் வளமானபேச்சுக்கு இடமுள்ள விடத்து, வாக்குவளமும் சக்தியுமுள்ளவராயிருந்தார். ஆனால் பேசாமலிருக்கவேண்டுவது புத்திசாலித்தனமாகும்பொழுது வாயை மூடிக்கொள்ளும்படியான சுபாவத்தையுடையவர். தன் சொந்த ஆலோசனையை வெளியிடுவதால் தன் தேசத்தின் சுவாதீனங்களுக்கு அபாயம் நேரிடக்கூடியதாயிருக்கையில், அதனை ஜாக்கிரதையாய் அடக்கிவைப்பாராயினர். அவருடைய சத்துருக்கள் அவரைப்பயமும் கோழைத்தனமுமுள்ளவர் எனும்படி மிகவும் சாந்தமும் சமாதான குணமும் வாய்ந்தவராயிருந்தனர். ஆகிலும் ஒரு காரியமான காலம் வந்தபொழுது அவருடைய தைரியமானது சுத்தவீரமுள்ளதும் அவருடைய தீர்மானமானது மாற்றமுடியாததாயுமிருந்தது. நெதர்லாந்து (Notherland) இன் சரித்திரக்காரனாகிய, மிஸ்டர்மார்டலி (Mr. Martley) சொல்லுகிறார். "சமுத்திரத்திலுள்ளபாறை, இரைச்சலிடுகிற அலைகளினடுவே அமைதி" என்னுமொழிகளை அவருடைய இஷ்டர்கள் அவரது உறுதிப்பாட்டைப் புலப்படுத்துங்குறிகளாகக் கொண்டனர்.

மௌனமான உவில்லியம் (William the silent) என்பவரை, அவர் அனேகவிஷயங்களில் ஒற்றுமையாயிருக்க, உவாஷிங்க்டன் (Washington) என்பவரோடு, உவமிக்கின்றனர். மிஸ்டர் மார்ட்லி (Mr. Mortley) தச்சு (Dutch) தேசாபிமானியைப்போல அந்த அமேரிக்கன்கண்ணியவதைக்கும் பராக்கிரமத்துக்கும் பரிசுத்தத்திற்கும்,

சரீரமேன்மைக்கும், அவதாரமூர்த்தியாகச் சரித்திரத்தில் விளங்குகின்றனர். மிகுந்த கஷ்டமும் அபாயமுமுள்ளகாலங்களிலும் அவருடைய உணர்ச்சிகளின்மீது அவருடைய ஆளுகையானது, அவரைப்பழகியறியாதவர்களுக்கு உடன்பிறந்த சாந்த குணத்தையும் சகிப்பையும், உடைத்தாயிருந்தனர் என்று கருத்துக்கொள்ளும்படியான வண்ணமிருந்தது. ஆகிலும் உவாஷிங்டன் (Washington) ஆனவர் இயல்பிற் கோபமும் படபடப்பும் உடையவராயிருந்தனர். அவருடைய சாந்தமும் இனிமையும் மரியாதையும் பிறரைக்கவனித்தலுமாகிய குணங்கள் தன் சிறுவயசுமுதலே ஜாக்கிரதையுடன் பழக்கிவந்த கண்டிப்பான மன அடக்கம், தளராத சுவயசிக்ஷைகளின் பயனாக இருந்தனர். "அவருடைய குணம் கோபமுள்ளதாயும் இச்சைகள் பலமுள்ளனவாயுமிருந்து, தனக்குநேர்ந்த மனக்கவர்ச்சிக்கும் மன எழுச்சிக்கும் உரிய பல விஷயங்களுள்ளும் ஒன்றை அடக்கவும், மற்றொன்றை வெல்லவுமாக இடைவிடாமுயற்சியும் முடிவாகிய வெற்றியும் அவர்பால் நிகழ்ந்தன"வென்று அவருடைய ஜீவ்யசரித்திரக்காரர் கூறுகின்றனர். பினனும் "அவருடைய இச்சைகள் பலமாயிருந்தன. சிலவேளை அவைகள் உக்கிரத்துடன் கிளர்ந்தன. ஆனால் ஒருநிமிஷத்தில் அவைகளையடக்கும்படியான சக்தி அவருக்கு இருந்தது மன அடக்கந்தான் அவருடைய ஒழுக்கத்தில்மிகவுமுக்கியாம்சமாக இருந்தது. அதிற்சிலபாகம் சிக்ஷித்துக்கொண்டதின் பயனாகவேயிருந்தது. ஆகிலும் மற்றவர்களுக்கு இல்லாத அளவில் இந்தச் சக்தியை இயல்பிலே அவர் உடைத்தாயிருந்ததாகத்தோற்றுகிறது."

(தொடரும்.)

---

உ

சிவமயம்.

# ஆத்திசூடிச் சூத்திரவிருத்தி.

மங்கல வாழ்த்து.

அறம் பொருள் இன்பம் வீடென்னும் உறுதிப்பொருள்களுணன்கனுள் அறமும் பொருளுமாகிய இரண்டினிறுத்தி மக்கட்கு எளிதில் அவ்வுறுதி யெய்தற் பொருட்டுச் சிறுமொழிகளாற் சூத்திரித்து

இந்நூலியற்றப்புகுந்த ஆசிரியர் முதற்கண் இடையூறுநீக்கி இனிது முடித்தற்குரிய கடவுளை வாழ்த்துவதாகிய மங்கலவாழ்த்துக் கூறுகின்றார். அது வாழ்த்தும் வணக்கமும் பொருளியல்புரைத்தலுமென மூவகைப்படும். அவற்றுள் இது வாழ்த்தும் வணக்கமுங் கூறுதலெனக்கொள்க. இனிக்; கவிதான் எடுத்துக்கொண்ட பொருட்கு ஏற்புடைக் கடவுளையாதல், வழிபடு கடவுளையாதல் வாழ்த்துதன் மரபு. அவற்றுள் இவ்வாழ்த்து வழிபடு கடவுளையெனவறிக.

ஆத்தி சூடி யமர்ந்த தேவனை
யேத்தி யேத்தித் தொழுவோ மியாமே.

ஆத்தி திருவாத்திப்பூ. சூடி அதனைத்தரிக்கும் இறைவராகிய சிவபெருமான். பிறைசூடி யென்பதுபோல. கொன்றைப்பூமுதலிய பிறமாலைகளு முளவாக ஆத்தியை ஈண்டுக்கூறியது, அம்மாந்தான் அடியாருய்தற் பொருட்டு இறைவர்தா மமர்ந்து யோகுசெய்தற்குச் சிறந்த நிழலையுங் கொடுத்தலானென்க. யோகுசெய்தற்கு ஆத்தியே யன்றிப் பெருந்துறைக் குருந்தும் வெள்ளிமலைக் கல்லாலுமில்லவோ வெனின்; அப்பூக்களை யவர்சூடலின்மையுணர்க. ஆத்திமுதலென்னும் பெயருமோதுபவென்க.

அமர்தல் ஈண்டு விரும்புதல். தேவன் மூத்தபிள்ளையாகிய விநாயகக்கடவுள். எனவே இறைவர் விநாயகர்மாட்டுக் கழிபேருவகையுடையரென்பது பெற்றாம். என்னை ? "மூத்தமகனிடத் தார்வ் மீன்றெடுத்த பிதாமகற்கு முதிருமாற்றால்" என்பது மேற்கோள். தேவனென்று பொதுப்படக்கூறினார். கூறினாரேனுந் தாம்வழிபடு கடவுள் விநாயகரேயாக அவரது மதங்கருதிய தலைமைப்பாட்டான் அப்பெயர் அவர்க்கே யோகரூடியாகச் செல்லுமாகலானும், ஆகமங் கூறுஞ் சிவபெருமான் சகளத் திருமேனிகாட்டிச் சத்தியை மணந்தஞான்று அவராற் பூசிக்கப்பெறுந் தேவனாய் நின்றாரென்பது புராணமாகலானும், இறைவரது முதுமைப்பருவத்தையே விநாயகரெனக் கூறும் பிறிதோர் மதமுண்மையானும் பிறவானும் ஈண்டுத்தேவனென்றது விநாயகக் கடவுளையேயென்க. அன்றிக்; கொன்றைவேந்தன் மங்கல வாழ்த்தின் விநாயகக் கடவுளைச் செல்வனென்றதற்கேற்ப

*

ஈண்டுப் பிள்ளையென்னும் பொருட்டாத் தேவனென்றாரெனலுமாம். தமக்கொரு தலைவனில்லாத் தலைவரென்னும் பொருளே விநாயகரென்பதுங்காண்க.

இனி; அமர்ந்தவென்பதற்கு வீற்றிருந்தவெனவும், தேவன் என்பதற்குக் கடவுளை (ஈச்சுரனை) எனவும் பொருள்கூறி அதற்கேற்பச்சூடியை வினையெச்சமாக்கினாருமுளர். அவர் ஆத்திசூடுதல் துணையானே தேவனை ஈச்சுரனாக்கொண்டனர்போலும். விநாயகர்க்கும் மூன்று கண்களுடைமையும், மற்றை இறைவரது அங்கம் பிரத்தியங்கம் சாங்கம் உபாங்கமனைத்தும் விநாயகர்க்கு முண்மையாதல்போல ஆத்தியும் உரியதாமாறும் உணராராயினர் கொல்! இனி; ஆத்திசூடியமர்ந்ததேவனென்பதை யிரட்டுறமொழிந்து ஆத்திமாலையைச்சூடிச் சகளத்திருமேனி கொண்டெழுந்தருளிய விநாயகக் கடவுளெனவுங் கொள்ளக்கிடந்தமை காண்க.

எத்தியேத்தி என்பது 'ஈர்த்தீர்த்து' என்பதுபோல நீங்கலா வன்புணர்த்தவந்த அடுக்கெச்சம். "விறகிற்றீயினன் பாலிற்படுநெய் போன், மறைய நின்றுளன் மாமணிச்சோதியான், உறவுகோனட்டுணர்வுகயிற்றினன், முறுகவாங்கிக் கடையமுன் னிற்குமே." என்பது தமிழ்மறை. இத்திருவிருத்தத்துள் விறகிற்றீயும் பாலினெய்யும் முறுகவாங்கிக் கடையவென்பது நீங்கலா அன்புசெய்தலென்னும் பொருட்டாதலுணர்க. யாம் உளப்பாட்டுத்தன்மைப்பன்மை. யாந்தொழுவோமென முடிக்க. தெய்வவணக்கம். ஏகாரம் ஈற்றசை. ஆத்தி மலர்மேனிற்றலான் ஆகுபெயர்.

தந்தை யமர்ந்த தயனையேத்தவே அவர்க்கு மகிழ்துவப்பாமென்பார் ஆத்திசூடியெனவும், பின் கொன்றைவேந்தன் எனவுங்கூறினார். அல்லதூஉம் இந்நூல் இளங்கல்விகற்குஞ் சிறுவர்க்காதலின் ஆத்திசூடியைநோக்கி விநாயகரைச் சிறுவராக்கி இனங்குறித்து ஏத்தினாரெனலுமாமென்க. ஏத்தியேத்தி அவரை எப்பொழுதும் புகழ்ந்தென்றபடி.

இச்செய்யுள் அடியிரண்டாய்த் தம்முளளவொத்து ஒழுகியவோசையும் விழுமியபொருளும்பெற்று நிற்றலான் வெண்செந்து

ன்றயெனக்காண்க. என்னை? "ஒழுகிய வோசையி னொத்தடி யிரண்டாய் - விழுமிய பொருளது வெண்செந் துறையே" என்பதோத்தாகலின் என்க.

சூத்திரம்.

## அறஞ்செய விரும்பு.

என்பது சூத்திரம். என்னுதலிற்றோவெனின்; இந்நூலுள் எடுத்தோதும் அறம் பொருளிரண்டனுள் அறத்துப்பாலதாகிய அறத்தையுணர்த்துதனுதலிற்று. இதன்பொருள்:—தருமத்தைச்செய்ய நீ ஆசைகொள்ளு என்றவாறு. எனவே மக்கள் விரும்பத்தக்கது அறமேயென்பதும், ஏனைவிருப்பமெல்லாம் அறத்துளடங்குமென்பதும் பெறப்படும். அறமென்பது தனக்கும் பிறர்க்கும் பயன்கருதிச்செய்யும் நல்வினை. அறமே தனக்கும் பிறர்க்குமா நல்வினை. இஃதுரைச்சூத்திரம். இவ்வாறே சூத்திரந்தோறும் விருத்திக்கு முன்னாகப்பின்னாக உரைச்சூத்திரமுஞ்செய்தாம். அது கண்டுகொள்க. பயன்கருதா தறஞ்செய்க வென்பவாயினும் பயனெய்தலுண்மையாம். அந்நல்வினை இம்மைப்பயன் கருதிச்செய்வதும் மறுமைப்பயன் கருதிச்செய்வதுமென இருவகைப்படும். அவற்றுள் ஈண்டுக்கருதியது பெரும்பான்மை மறுமைப்பயனென்க; இம்மையிற்செய்யும் நல்வினை மறுமைக்கு வித்தாகலின். இதனாற் பெரும்பான்மை மறுமைப்பயனுஞ் சிறுபான்மை இம்மைப்பயனுங் கருதப்படுமென்பது பெற்றாம்.

அந்நல்வினை தனக்கே பயன்குறிப்பதும், பிறர்க்கே பயன்குறிப்பதும், தனக்கும் பிறர்க்கும் பயன்குறிப்பதுமென மூவகைப்படும். அவற்றுள் ஒன்றாக இரண்டாக மூன்றுமேயாகப் பிறர்க்குத் தீங்குகுறித்தலின்றிச்செய்யும் எதுவும் அறவினையே யெனப்படும்.

இனித்; தனக்கே பயன்கருதிச்செய்வது: தனது உயிர்க்குப் பயன்கருதுவதும், தனதுடற்குப் பயன்கருதுவதும், தனதுயிருடல்கட்குப் பயன்கருதுவதுமென மூவகைப்படும். இம்மூன்றும் மேற்கூறியதனக்கே, பிறர்க்கே, தனக்கும் பிறர்க்குமேயென்று மூன்றிடத்துக்குமொக்கும்.

தனது உயிர்க்குப் பயன்கருதிச் செய்தல்லவது: இன்பமெய்து வது உயிரேயன்றி யுடலன்று; உடல் சடமாதலின். உயிரிழந்தவுடல் பிணமென்னும் பெயர்பெற்றுணர்ச்சியற்றொழியும். ஆகவேயெய்தும் பயனெல்லாம் உயிர்க்கேயாமென்க.

தனது உடற்குப் பயன்கருதிச் செய்தலாவது: உடல் சடமாயினும் உயிரைத்தாங்குதற்கு நிலைக்களமாயிருத்தலான் அவ்வுடலைப் பேணுதலாம். உடலைப் பேணலாவது உடற்கூறறிந்து ஏற்றகாலத்து ஏற்றவுணவளித்தலும், இருவகை யுடற்கருவிகளை ஏற்றபடியியக்குதலுமாம்.

தனது உயிருடல்கட்குப் பயன்கருதிச் செய்தலாவது உயிர்க்கே பயன்கருதிச் செய்வதும், உடற்கே பயன்கருதிச் செய்வதுமாகிய நல்வினைகளைத் தனித்தனியின்றி யொருங்கே செய்தல். அவை ஸ்நான முதலிய ஆசாரங்களும், பூசைமுதலிய சற்கிரியைகளும் பிறவுமாம். இவ்வளவும் தனக்குப் பயன்கருதிச் செய்யும் நல்வினை கூறிற்று.

இனிப்; பிறர்க்குப் பயனுமாறுசெய்தல்: பிறரென்றது ஈண்டு வறியராயினாரை. அவர் பொருளிலார், உறவிலார், குருடர்,செவிடர், முடவர் முதலாயினர். இவர்தமக்கு ஏற்றவாறு செய்கவென்பது. முற்றீவினை செய்தாரன்றே பின் அதன்பயனைத் துய்த்தற்குப் பொருளில ராதியாய்ப் பிறந்தனர், அத்தீவினையாளர்க்கு நல்வினைபுரிதல் பாவமன்றோ வெனின்; கடவுட்குமது கருத்தாக வுடலிருந்தன்றோ அவர்புரியுந் தண்டனையைத் துய்க்கும். அவ்வுடலை நிறுத்தற்பொருட்டு அந்நல்வினை துணையாமாதலின் அதனாற் குற்றமின்றென்க. அல்லதூஉம் 'மேலுலகமில்லெனினு மீதலே நன்று.' எனப்பிறருங் கூறுதலான் எவ்வாற்றானும் அறஞ்செய்தனன்றென்க. புகழ் இடம்பம் முதலிய கருதிச்செய்யும் நல்வினையும் பிறர்க்குப் பயனுயின் அறமேயாம். அந்நல்வினை அவருடற்கேயுரிய தென்க. பெற்றோர்பொருட்டுச் செய்யும் பிதிர்க்கடனாகிய நல்வினையோவெனின்; தனதுயிர் அவரதுயிரெச்சமே யாதலின் அவருயிர்க்கேயன்றித் தனதுயிர்க்கும் பயனாமென்க. எவ்வாற்றானும் பிறரது துயர்களையச்செய்யும் நல்வினையே சிறப்புடைத்தெனக் கொள்க.

இனித்; தனக்கும் பிறர்க்கும் பயனுமாறுகூறுதும். ஒரேகாலத்து ஒரோநல்வினை தனக்கும் பிறர்க்கும் பயனுமாறு செய்தலுமுண்டு. செய்யும் வினையான் இம்மையிற் பிறர்க்கும் மறுமையிற் றனக்கும் பயனும். இது பிறர்க்குப் பயன்கருதிச்செய்யும் நல்வினையுளடங்குமென்க, இதனாற் சிறுபான்மை இம்மைப்பயன் கருதியதென்பதுமமைந்து நின்றமை காண்க.

(தொடரும்.)

கோ. வைத்தியலிங்கம்பிள்ளை.

---

உ

# கதாசரித் சாகரம்.

## ரு-வது சதுர்த்தாரிகாலம்பகம் க-வது தரங்கம்.

[ஸ்ரீமத்-வீராசாமி ஐயங்காரவர்கள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

இரத்தினபுரமென்று பிரசித்திபெற்றதோர் நகரமுண்டு. அது தன்பெயருக்கிணங்க இரத்தினமுதலிய செல்வங்கள் நிறைந்து நகரங்களெவற்றினுஞ் சிறந்தது. அதிற் சிவனென்றும் மாதவனென்றும் பெயரையுடைய இரண்டு சூதாடிகளிருந்தனர். அவர்கள் தங்களைப் போன்ற பலரைத்தமக்குப் பரிவாரமாக்கிக்கொண்டு வஞ்சனைத்தொழிலா லவ்வூரிலுள்ள சகலமான தனிகர்களின் பொருள்முழுவதையும் அபகரித்துவிட்டுப் பின்பொருநாளவ்விருவரும் நாமிந்நகரம் யாவுங் கொள்ளையடித்துவிட்டோம்; ஆதலாலிப்பொழுது வசிப்பதற்கு உச்சயினீபட்டணம் போய்ச்சேரவேண்டும். அவ்வூரில் அரசனுடைய புரோகிதன் சங்கரஸ்வாமியென்னும் பெயரினையுடையவோர் பெரும்பணக்காரனிருக்கின்றானென்று கேள்விப்படுகின்றோம்; அவனிடத்திலுள்ள பொருள்களையும் நமது யுக்தியினாலபகரித்து அப்பொருள்களால் மாளவதேசத்துப்பெண்களின் கலவியின்பத்தையனுபவிப்போம்; அன்றியும் அப்பார்ப்பானுக்கோர் பெண்மணியிருக்கின்றாளென்றும் கேள்விப்படுகின்றோம். அப்பெண்ணையு மவனி

டத்தினின்று நிச்சயமாகக் கைப்பற்றிவிடலாம் என்று தீர்மானித்துத் தாமிருவருஞ்செய்யவேண்டிய சூட்சியின்னதென்பதையும் முடிவுசெய்துகொண்டு தம்மூரைவிட்டு வெளியேறிச்சென்றனர்.

அவ்விருவருள் மாதவனென்பவன் இராஜகுமாரன்போலவேடம்பூண்டு ஆடையாபரணங்களணிந்துகொண்டு உச்சயினீ நகரத்தையடைந்து அந்நகரத்தின் பக்கத்திலுள்ளவோர் கிராமத்திலிருந்தனன். பற்பல மாயைகளில் வல்லவனான சிவனென்பவன் பிரமசாரி வேடம்பூண்டு தானொருவனாகவே முதலிலவ்வுச்சயினீ நகரத்தையடைந்து அதையடுத்த சிப்பிரையென்னும் பெயருள்ள நதியின்கரையில் மாந்தோல், பிக்ஷாபாத்திரம், தருப்பம், மண் முதலியவற்றுடன் காணப்படும் ஓர் மடத்தில் வசித்துவந்தனன். அவனெவ்வொரு தினமும் அதிகாலையில் எழுந்து தன் தேகமுழுவதையும் மண்ணாற் பூசிக்கொண்டு தலைகுனிந்தவண்ணமே யந்நதியின் நீரில் நெடுநேரமிருப்பான்; அதைப்பார்த்தால் தான்செய்யும் அகிருத்தியத்திற்குப் பயனாகித் தனக்குச் சம்பவிக்கப்போகின்ற தாழ்ந்தகெதியை இப்போதே பயிலுகின்றவன்போலக் காணப்பட்டது. பின்பு ஸ்நானஞ்செய்தவுடனெழுந்து கரையிலிருந்து சூரியனைநோக்கி மேலேபார்த்தவண்ணமாக நெடுநேரமிருப்பான். அது தான்செய்யுங் கபடவேஷத்திற்குக் கழுவிலேற்றித் தண்டித்தல்தான் தக்கதென்பதைக் காட்டுதல் போலுந் தோன்றிற்று. அவன் ஸ்வாமி சந்நிதியிற்சென்று தருப்பைப்புல்லைக் கையிலணிந்துகொண்டு செபம்பண்ணுவதும் பத்மாசனத்தில் வீற்றிருந்து ஜம்பமாய்த் தவசிபோலபிநயம் செய்வதுமாய் சாதுக்களுடைய தெளிந்தமனத்தைத் தன் கபடத்தினாற் கவர்வது போலவே நல்ல தாமரைமலர்களைக்கவர்ந்து முப்புரமெரித்த பரமேஸ்வரனைப் பூஜித்துவந்தான். பூஜைசெய்தபின்னர், மறுபடியும் செபஞ்செய்பவன்போற் பாசாங்குசெய்துகொண்டு தனது வஞ்சனைத் தொழில்களை நினைப்பவன்போல் தியானஞ்செய்வான். தினந்தோறும் நாழிகையிருபதுக்குமேல் பிக்ஷையெடுக்கப்போவான். அத்தருணத்தில் கிருஷ்ணாஜினத்தை யரையி லணிந்துகொண்டு தன் மாயமானபார்வை யெவ்விடத்திலும் செல்வதுபோலவே தானுமந்த நகரம் யாவுஞ்சுற்றி மௌனத்துடன் பிராமண வீடுகள்தோறுஞ் சென்று

பிக்ஷையெடுத்து அந்த அன்னத்தை மூன்று பங்கிட்டு ஒரு பங்கைக் காக்கைக்கும், ஒருபங்கை அதிதிகளுக்கும் போட்டுவிட்டுக் கபடத்திற்கெல்லாம் மூலகாரணமாயிருக்கின்ற மற்றொருபங்கன்னத்தில் தன் வயிற்றுத்துருத்தியை நிரப்புவான். பின்னுமவன் தன் பாவங்களனைத்தையுங் கணக்கிடுகின்றவன்போலக் கையில் செபமாலையை வைத்துக்கொண்டு நெடுநேரம் பொய்யான செபம்பண்ணுவதும் இராக்காலங்களில் தானொருவனுகவே அந்த மடத்திலிருந்து உலகத்தவரை வஞ்சித்தற்குரிய சூட்சிகளையாலோசிப்பதுமாய்ப் பார்ப்பவர்கள் வருந்தும்படியாய்ப் பொய்த்தவம்புரிந்து அந்நகரத்திலுள்ளவர்கள் மனதைக்கவர்ந்தனன். அப்பொழுதவ்வூரிலுள்ள பக்திமான்களனைவரும் ஓகோ இவர் மகாதவசி மகாசாந்தர் என்று கொண்டாடும்படி கியாதியுண்டாயிற்று.

அப்பொழுது மாதவனென்பவன் தன் சிநேகிதனிவ்விதம் பிரசித்திபெற்றிருக்கின்றானென்பதைச் சாரன்மூலமாயறிந்துகொண்டு உச்சயினீநகரம் வந்துசேர்ந்து அந்நதியையடுத்த தேவாலயத்திற்கு வெளியிற் சற்றுத்தூரத்தில் ஓர் வீட்டில் வசித்துவந்தனன். அவனொருநாள் ராசகுமாரன்போலுள்ள தனது வேஷத்துடனேசென்று சிப்பிராநதியில் ஸ்நானம்பண்ணிவிட்டுத் தன் வேலைக்காரர்களுடன் ஆலயத்திற்கு வந்தான். அவ்விடத்தில் ஸ்வாமியினது முன்பு செபஞ்செய்துகொண்டிருக்கின்ற சிவனைக்கண்டவுடன் மிகவும் வணக்கத்தோடு திடீரென்று அவன்காலில் வீழ்ந்து நமஸ்கரித்து எழுந்துநின்று இந்த மகானையொத்த தவசியை யுலகத்திற்கண்டதேயில்லை. இவரை யானனேகம் புண்ணியதீர்த்தங்களில் பற்பலதடவைகளிற் கண்டிருக்கின்றேனென்று அவ்விடத்திற் கூடியிருக்கின்ற பலருமறியும்படி புகழ்ந்துபேசினன். இப்படி ஸ்தோத்திரஞ்செய்கின்ற மாதவனைச் சிவன்பார்த்தும் பாராதவன்போல டம்பத்தினால் தனது கழுத்தைச் சற்றுமசையாதவனாகி அப்படியே யிருமாந்திருந்தனன். பின்பு மாதவன் தன் வாசஸ்தானம் போய்ச்சேர்ந்தனன். அன்றிரவிலவ்விருவரு மொரேயிடத்திற் சந்தித்துத் தங்களிஷ்டப்படி வேண்டியவுணவுகளைப் புசித்துவிட்டு மேற்செய்யவேண்டிய காரியமின்னதென்பதையும் முடிவுசெய்துகொண்டார்கள். உடனே சிவனென்ப

வன் விடியயாமத்திற்கே தன் மடம்வந்து சேர்ந்தான். மாதவன் காலையிலெழுந்து தன்னைச்சேர்ந்த சூதாடிகளிலொருவனையழைத்துத் தக்கவிலை மதிப்புள்ள இரண்டு வஸ்திரங்களை அவன் கையிற் கொடுத்து இவற்றை யிவ்வூரரசன் புரோகிதன் சங்கரசுவாமியென்பவனிடம் மிகவணக்கத்துடன் காணிக்கையாகக் கொடுத்துவிட்டு, தக்ஷிண தேசத்தினின்று மோரிராஜகுமாரர் மாதவனென்று பிரசித்திபெற்றவர் தம் குலத்திலுள்ளவர்களா லவமதிப்புற்றுத் தன் பித்ரார்ஜிதமான வெகு தனங்களையுமெடுத்துக்கொண்டு தன்னையொத்த வேறுசில ராஜபுத்திரர்களோடு உங்களரசனை ஆசிரயிக்கவேண்டுமென்று இவ்விடம் வந்திருக்கின்றார். ஆதலால் முதலில் உங்கள் தரிசனத்திற்காக என்னையனுப்பினாரென்றுசொல்லித் தங்களைப்போல் கீர்த்திபெற்றவருலகத்தில் யாவரிருக்கின்றாரென்று புகழவேண்டுமென்றனன். இதனைக்கேட்டதுமவன் அப்படியே செய்கின்றேனென்று அந்த வஸ்திரங்களைக் கையிலெடுத்துக்கொண்டு புரோகிதன் கிரகத்திற்குச்சென்று அவன் சமயம்பார்த்துத் தனித்திருக்கும்போது காணிக்கையாகக்கொண்டுவந்த வஸ்திரங்களையவனிடங்கொடுத்து மாதவன் சொல்லிய விஷயத்தை மிகவுமொழுங்காயெடுத்துப்பேசிப் புரோகிதனை ஸ்தோத்திரஞ்செய்தனன். உடனே அவனுந் தனக்குக் காணிக்கையாகக் கொடுக்கப்பட்ட பொருளிலுள்ள ஆசையினால் அவன் சொல்லியதையுண்மையென்றே விசுவசித்தனன். ஆனால் பேராசையுள்ளவர்களை யிழுப்பதற்கு மருந்து ஈகையொன்றே போதுமானது.

பின்பு மாதவன், தானனுப்பிய மனிதன்மூலமாய்ப் புரோகிதன் நம்பிக்கையுற்றிருக்கின்றானென்பதையறிந்து மறுநாள் அவன்சமயம் பார்த்துவரச்செய்து தானேயவனைப் பார்ப்பதற்காகப் புறப்படும்போது தீர்த்தயாத்திரைக்காகக் காஷாயம்பூண்டு யோகதண்டத்துடன்கூடியிருக்கின்ற ராஜகுமாரர்களைப்போல் வேஷந்தரித்துள்ள தன்னைச்சேர்ந்த சிலர் புடைசூழ்ந்துவர முன்னேயொருவனையனுப்பித் தன்வரவை அவனுக்குத் தெரிவித்தனன். அப்புரோகிதனு மெதிர்கொண்டுவந்து இவருக்கு நல்வரவுகூறி மகிழ்வித்துத் தன் கிரகத்திற்கழைத்துச்சென்றான். அப்பொழுது மாதவன் சற்றுநேரமங்கிருந்து அவனுடன் சம்பாஷித்துவிட்டுப் புரோகிதனனுமதிபெற்றுத்

தன்னிருப்பிடம் வந்துற்றனன். மறுபடி மறுநாளுமவன் இரண்டு யர்ந்த வஸ்திரங்களைப் புரோகிதனுக்குக் காணிக்கையாகக்கொடுத்த னுப்பி அவனிடஞ்சென்று நாங்கள் பல பரிவாரஜனங்கள் எங்கட்குச் சேரவேண்டுமென்பதற்காக இராஜசேவையை விரும்புகின்றேமே யன்றி வேறில்லை. ஆதலாற்று னும்மையடுத்தோம். எங்களுக்கோ மிருந்தபொருள் கைவசமிருக்கின்றது என்றனன். இதைக்கேட்ட புரோகிதன் ஈாமிவனிடத்திலும் தனலாபம் பெறலாமென்ற கருத் துடன் கூடியவனாக உமதிஷ்டப்படியே செய்விக்கின்றேனென்று கூறிவிட்டு அப்பொழுதே அரசனிடஞ்சென்று மாதவன்பெருமை யை மிகவும் புகழ்ந்துபேசி அவன் வந்திருக்கும் விஷயத்தையுந் தெ ரிவித்தனன். அரசனுந் தன் புரோகிதனிடத்துள்ள கௌரவத்தி னால் அவன் சொல்லியதை அவ்விதமுண்மையென்றே கருதினன். மறுநாள் புரோகிதன் மாதவனை யவன்பரிவாரத்துடன் கௌரவத் தோடு அரசனிடமழைத்துச்சென்றான். அவ்வேந்தனும் இராஜகு மாரனையொத்த வடிவுடன் கூடியிருக்கின்ற மாதவனைப்பார்த்து ஆத ரவுடன் அனுக்கிரகித்துத் தக்கவேலையிலும் நியமித்தான். அதுமு தல் மாதவன் பிரதிதினமும் பகல்முழுதும் ராஜசேவை செய்வதும் இராத்திரிதோறும் சிவனுடன் ஆலோசனை செய்வதுமாயிருந்தான்.

(இன்னும் வரும்.)

---

## *ஆசாபாசங்களும் அவைகளையொறுத்துத்தற்கடிதலும்.

(முற்றொடர்ச்சி)

இந்தவிரோதத்துக்குப்பாவப்போசனமென்று, வேதசாஸ்திரிகள் பேரிட்டுவழங்குப. நம்மைத்தண்டித்து நமது அகந்தையை அடக் குவதற்காகவும் நமது இழிதகைமையையும் நிர்ப்பாக்கியத்தையும் நாமே அறிந்துகொண்டு, கடவுளுக்குமுன்பாக நம்மை நாமே தாழ் த்திக்கொள்வதற்காகவும், இந்தப்போராட்டம் நம்மிடத்து எஞ்ஞா

---

* இவ்வியாசம் மதுரைத் தமிழ்ச் சங்கத்து எட்டாம்வருஷோற்சவ தினங்களுளொன்றாகிய 1909-ஹு மேமீ 25உ கூடிய வித்துவச்சபையில் கீழக்கரை, ஸ்ரீமத்-M. ஜோஸப்படையாஸ் அவர்களாற் படிக்கப்பட்டது.

ன்றும் நிகழ்ந்துவரவேண்டுமென்று தேவதிருவுளம் நீதியாய் நிரூபித்தது.

கடவுள் மனிதனைப்படைக்கும்போது மகிமைப்பிரதாபத்தால் அவனைப்பூர்த்தியாக்கித் தமதுவரங்களாலும் வரப்பிரசாதங்களாலும் அலங்கரித்துச் சிங்காரித்தார். என்றாலும் மனிதன் இந்த நன்மையையறிந்துகொள்ளாமற் பாவஞ்செய்து தன்சிருட்டி கருத்தாவுக்கு நன்றியற்றவனாய்ப்போய் மிருகங்களுக்குரிய ஆசைக்கும் ஆசாபாசத்துக்கும் இடங்கொடுத்ததினால் மிருகத்துக்கொத்தவனாய்த் தான்பெற்றிருந்த ஞானவரங்களையுமிழந்தான். ஆதலின் அவன் தன்னை நன்றாயறிந்து கர்வியாமலிருக்கும்பொருட்டு, கடவுள் அவனைத்தாழ்த்தினார். இவைநிற்க, குழப்பஞ்செய்கிற நமது ஆசாபாசங்களும் சரீர இச்சையும் நாம் புண்ணியத்தில் முதிர்ந்து விருத்தியடைவதற்கு முக்கிய இடையூறாய் நிற்பன. எங்ஙனமெனின், நம்மைச்சோதனைகளால் வருத்திப் பாவஞ்செய்யத்தூண்டி விளைகிறபாவங்களும் குற்றங்களும் அவ்வாசாபாசங்களாலும் சரீர இச்சையினாலுமே உண்டாகின்றனவாதலின் சரீரம் நமக்கு மகாபெரிய சத்துருவாயிருக்கின்றது.

இதுபற்றியன்றோ "உங்களிடத்தில் உண்டாகிற சண்டையும் விரோதமும் எங்கிருந்துவருகின்றன? உங்கள்புத்தியோடு போராடுகிற ஆசாபாசங்களாலன்றோ வருகின்றன" என்று அர்ச் யாகப்பர் (St. James) தமது நிருபத்திற் கூறுகின்றார். நமதுள்ளத்தில் நடக்கிற சண்டைக்கும் நாம் செய்கிற பாவாக்கிரமங்களுக்கும் காரணம் யாது? நம்மிடத்திலுள்ள இந்திரியப் பிரியமும் துர் இச்சையும் சுயசிநேகமுமே இவைகளுக்குக் காரணமாகின்றன. புண்ணியவிருத்தி மார்க்கத்தில் நமக்குநேரிடுகிற இடையூறுகளுக்கும் இவைகளேகாரணங்கள். இன்பதுன்பத்தைச் சமப்படுத்துவதே புண்ணியத்தில் நேரிடுகிற பிரயாசையென்று அரிஸ்தோத் (Aristotales) என்னும் சாஸ்திரி விதித்தான். துன்பத்தைப்பட்டநுபவித்து இச்சையையடக்குவதே ஞானமென்று எப்பிக்தேத் (Epietetus) என்னும் சாஸ்திரி தீர்மானித்தான். நமக்கு நேரிடுகிற துன்பதுரிதங்களைத்தைரியமாய்ப் பட்டநுபவித்து நமக்குப்பிரியமானதை விவேகத்தோடு விலக்கி நடப்பதே புண்ணியமாகும். யாதொருதுன்பத்தை விலக்

குவதற்காக வென்கிலும் யாதொரு இன்பத்தைத் துய்த்தநுபவித்தற் காகவென்கிலும் இந்த இன்பசுகத்தைத் தவிர்க்காததினுலென்கிலும் நாம் பாவத்தில் விழுகின்றோமென்று தினம் அநுபவத்தாலறிந்துவருகின்றோம். சிலர் செல்வம் மகிமை பெருமை இன்பசுகமாதியவைகளின் ஆசையால் பாவஞ்செய்வர். வேறுசிலர் தேவகற்பனைகளைக் கைக்கொண்டு ஒழுகும் வருத்தத்துக்குப் பயந்தும் தங்கள் சத்துருக்களை மித்துருக்களாய்ச் சிநேகிப்பதற்கும் ஜெபதப தானதரும விரதமநுஷ்டிப்பதற்கும், ஆத்துமசம்பந்தமான நற்கிருத்தியங்களைச்செய்வதற்கான அரும்பிரயாசைகளுக்கஞ்சியும் பாவஞ்செய்வர்.

இவைகளெல்லாம் இப்படியாக நமதுகெட்ட பற்றுதல்களையும் ஒழுங்கற்ற சுயசிநேகத்தையும் அடக்கிக் குழப்பமான நமது ஆசாபாசங்களையொறுத்து நம்மைத்திருத்திக்கொள்வதே தற்கடிதலாம். இவ்வுலகத்தில் மனிதனுடைய ஆயுட்காலம் ஓயாதசண்டையென்று யோபென்னும் (Job) மகாத்துமாமொழிந்தார். நமது ஆன்ம ஆசைக்கு விரோதமான இச்சை நமது சரீரத்திலும் நமது சரீர இச்சைச்கு விரோதமான ஆசை நமது ஆன்மாவிலும் இருக்கிறதென்று அர்ச்சின்னப்பர் (St. Paul) சொல்லுகிறார். நமதுள்ளத்தில் நடக்கிற ஓயாதசண்டைக்கும் காரணமிதுவே. தன்சரீரத்தையும் ஆசாபாசங்களையுஞ் செயிக்கின்றவன் போர்வீரர் எல்லாருக்கும் மேற்பட்டவீரனென்பது திண்ணம். இதுவே தேவதாசருக்குரிய வீரசூரத்தனமென்று அம்புரோஸ் அகுஸ்தீன் (Sts. Ambrose and agustin) முனிவர்கள் அறைந்தார்கள். சரீரபலன் ஒன்றுக்கு முதவாது. தன்சரீரத்தைச்செயித்து ஆசாபாசங்களையடக்கி இன்பசுகங்களைப்புறக்கணித்து வருத்தம்பிரயாசைகளைப் பொறுமையோடுசகித்துக்கொள்ளுந் தைரியமே மெய்யான வீரசூரத்தனமாம். மற்றவர்களை ஆண்டு நடத்துகின்றதைவிடத் தன்னைத்தானே ஆண்டுதன்சுய இச்சையையும் ஆசாபாசங்களையுமடக்கி நடத்துவது மேலான அதிகாரமென்பதிற் சந்தேகமில்லை. இதனுனே வீரசூரனைப்பார்க்கிலும் பொறுமையுள்ளவனை அதிகமாகக் கனம்பண்ணவேண்டுமென்றும் பட்டணங்களை முற்றுகைபோட்டுப் பிடிக்கிறவனைப்பார்க்கிலும் கோபத்தை அடக்கிறவன் மேற்பட்டவனென்றும் ஞானியானவர் சொல்லுகிறார்.

இதற்குஅர்ச்- அம்புரோஸ் சொல்லுகிற நியாயமாவது: "நமது வெளிச்சத்துருக்கள் எல்லாரையும்விட நமதுள்ளத்திலுள்ள கெட்ட பற்றுதல் அதிக ஆபத்துக்குரிய சத்துருவாகும். ஆகையால் உட்சத்துருக்களைச்செயிக்கிறவன் வெளிச்சத்துருக்களைச் செயிக்கிறவனுக்கு மேற்பட்டவ"னென்பதே. அந்த அர்ச்-அகுஸ்தீன் என்பவரே சொல்லுகிறதாவது: "மிருகங்களுடைய நடக்கை ஓர்விதமானது. தேவதூதர்களுடைய நடக்கை வேறுவிதம். மனிதனுடையநடக்கையோ இன்னொருவகையானது. மிருகங்களுடைய நடக்கைமுழுதும் பூமியை நாடியிருக்கும்; அவைகளின் இச்சைப்படி நடப்பதே அவைகளுக்குவேலை. தேவதூதருடைய நடக்கையோ முழுதும் மோட்சத்துக்குரியது. கடவுளோடு ஒன்றிப்பதே அவர்களியற்கைத்தொழில். மனிதருடைய நடக்கையோவெனின் மிருகங்களுடைய நடக்கைக்கும் தேவதூதரின் நடக்கைக்கும் மத்திமதரமானது. மனிதன் புத்திக்கேற்ப நடந்தால் தேவதூதருக் கொப்பாவான்." "சரீரத்துக்கேற்ப நடந்தால் மிருகங்களுக் கொப்பாவான்" "சரீர இச்சைப்படி நடக்கிறவன் சரீரி, தேவகட்டளைப்படி நடக்கிறவன் அசரீரி" என்றார் அம்புரோசியாரும். ஆகையின் சரீரஇச்சையின்படி நடக்கிறவன் புத்தியுள்ளமனிதனுக்கடுத்த நடக்கையாய் நடவாமல் மிருகங்களைப்போல நடக்கிறான். நாம் ஆசாபாசங்களையொறுத்துத் தற்கடிதலுக்கு இந்தநியாயமொன்றே போதுமானது. ஏனெனில் கடவுளுடைய சாயலாகவும் முடிவில்லாத நித்தியகாலமும் அவரைச்சுகித்தநுபவிப்பதற்காகவும் உண்டாக்கப்பட்ட பிரபுவாகிய மனிதன் சரீரத்துக்கும் இந்திரிய இச்சைக்கும் அடிமைப்பட்டுச் சரீரத்துக்குக் கீழ்ப்படிந்து மிருகங்களுக்குரிய துர் இச்சைப்படி நடந்து அவைகளுக்கொத்தவனாகிறதைவிட அதிக அயோக்கியமான இலச்சைக்கேடு வேறுளதோ? "எஜமாட்டி கீழ்ப்படிகிறதும் அடிமை அவளை ஆளுகிறதும் புத்திக்கடாத காரியமென்று" அர்ச்-பெர்னர்தூஸ் (St Bernardes) சொல்லியிருக்கிறார்.

(இன்னும் வரும்.)

---

உ

திருச்சிற்றம்பலம்.



# யானையாராய்ச்சி.

இதனை ஆனையெனவும் வழங்குவர். திருவிளையாடற்புராணம்-திருமணப்படலம் கூஎ-வது செய்யுளில், "கடிமுரசானைமேலறைவித்தார்" எனக்கூறியதனுற்காண்க.

இதனைப் பெரியவுயிர்க்குதாரணமாகக்கூறுவர் "அத்திமுதலெறும்பீறுனவுயிரத்தனைக்கும்" என்பதனுற்காண்க.

இது மூவகைப்பிறப்புடையது. "முத்திறத்தனவெண்ணலப்பிறப்பினமூரிவெங்களியானை" எனக்கூறிய, மகாபாரதம், சூதுபோர்ச்சருக்கம், எகூ-வது-செய்யுளிற்காண்க. மூவகையாவன:—மலையிற்பிறத்தல், வனத்திற்பிறத்தல், நதியிற்பிறத்தல் எனமூன்றும். இம்மூவகைப்பிறப்புடையனவற்றை முறையே கிரிசரம், வனசரம், நதிசரமென்பர்.

இஃது அரசர்முதலாயினோ ருலாப்போதற்குச் சிறந்தவாகனமும், போரிற் பகைவரைச்செயிப்பதற்குரிய நால்வகைச்சேனைகளில் ஒருவகைச்சேனையுமாயிருப்பது; முறையே திருவிளையாடற்புராணம்

உக்கிரகுமாரனுக்கு வேல்வளைசெண்டு கொடுத்தபடலம்-௫௮-வது செய்யுளில், "ஆனையெருத்திற்சிங்கவிளவடலேறென்னவயல்வேந்தர் சேனைதழுவவரும் பவனிக்கு" எனக்கூறியதனாலும், கம்பராமாயணம், பாலகாண்டம், திருவவதாரப்படலம்-௨௨-வது செய்யுளில், "கசரததுரகமாக்கடல்கொள்காவலன்" எனக்கூறியதனாலுங்காண்க.

அவ்வரசர் பட்டத்துயானைக்கிலக்கணமாமாறு - நான்குகாலுந் துதிக்கையுங், கோசமும், வாலுமாகியவேழுறுப்பும் நிலத்திற்றோயப் பெற்றதுமாய்ப், பாலையுஞ்சங்கையுமொத்த வெண்ணிறம்வாய்ந்த நகங்களையுடையதுமாய்க், காலினாலுந் துதிக்கையாலுஞ் சரீரத்தாலும் வாலினாலுங் கொம்பினாலுங் கொல்லவல்லதாய், ஏழுமுழவுயரமும் ஒன்பதுமுழநீளமும் பதின்மூன்றுமுழச் சுற்றுமுடையதாய், சிறியகண்ணையுஞ் சிவந்தபுள்ளிகளையுமுடையதாய், முன்புயர்ந்ததாய்ப், பின்புதாழ்ந்ததாயிருப்பது. இவ்வாறுபிங்கலநிகண்டு "காலோர் நான்குந்தனிக்கையுங்கோசமும் - வாலுறுப்போடேழுமாநிலந்தோய்வதும் - பாலுஞ்சங்கும்போலுங்காலுகிர் - காலினுந்தன்றனிக்கையினுமெய்யினும் - வாலினுமருப்பினுங்கோறல்வல்லதுவா - யேழ்முழமுயர்ந்தொன் பான்முழ நீண்டு- பதின்மூன்றுமுழஞ் சுற்றுடைத்தாகித் - தீயுமிழ்சிறுகண்ணுஞ்செம்புகரு முடைத்தாய் - முன்புயர்ந்து பின்பணிந்ததாய - தியானையரசுவாவாகுமென்ப." என-௧௪௯௨-வது செய்யுளிற்கூறியது காண்க. சிவந்தபுள்ளிகள், பட்டின்சித்திரத்தொழிலைப்போலிருக்குமென்றார். மகாபாரதம், பதினாறாம்போர்ச்சருக்கம், "செம்புகர்பட்டின்றொழிலிற்பயில்கிற்பது" என்னும் ௮-வது கவியிற்காண்க.

அரசர் இதனை யொருவகைப்படையாகவைத்துப் போர்புரியச் செய்வதன்றித் தாங்களும் அதன்மேலிருந்து விற்போர்முதலியபோருஞ்செய்வர். இதனை, மகாபாரதம், பதினாறாம்போர்ச்சருக்கம்-௧௧, ௧௨, ௧௫-வது கவிகளிற்காண்க.

இப்போர்க்குரிய யானைமார்பினிலே மூன்றுசுழியுடையதாய்க், கற்றாணொத்த கால்வலியுடையதாய், வெண்ணெய் நிறமுள்ள நகங்களும் ஆமைபோன்ற புறவடிகளுமுடையதாய், இளங்கமுகுபோன்ற

வாலுடையதாய்க், கட்டுத்தறியையும்விலங்கையு முறிப்பதாய்ப், பாகரையுங் குத்துக்கோலையுந் தூரத்தேகண்டாலுங் கோபங்கொள் வதாய்த், தன்னிழலைக்கண்டு வேறுயானையென்று கோபிக்குங் கருத் துடையதாய், நடனந் துரிதகதி மந்தகதி ஓட்டம் எனநான்குதொ ழிலையுடையதாய், அங்குசம் வார்த்தை மேலிருந்தோர் காலினன் மிதிக்குமுறை இம்மூன்றாலும் ஏவுமுறையறிவதாய்ப், போரிலே இட சாரி வலசாரி வருவதாய், முற்கூறியவாறே யொன்பதுறுப்பினுங் கொல்லுந்தன்மையுடையதாயிருப்பதென்பர். அச்சருக்கத்தில் கூ, க0, கஉ, கரு-வது கவிகளிற் காண்க.

இதற்கு மதமூன்றெனவும், அது கருநிறமாயுள்ளதெனவுங்கூ றுவர். அவை கன்னமதம், கைமதம், கோசமதமென்பனவாம். திரு க்கோவையார், ருரு-வது செய்யுளிற், "கருங்கடமூன்றுகுநால்வாய்க் கரியுரித்தோன்" எனக்கூறியதனுற்காண்க.

இம்மதம் ஏழிடத்தினு நின்றொழுகுமென்பர். மகாபாரதம், சூதுபோர்ச்சருக்கம்-எகூ-வது செய்யுளில், "எழுதிறத்தினுமிகவிடு வனமததாரை" எனக்கூறியதனுற்காண்க. அவ்வேழிடமாவன— கன்னமிரண்டு, கண்ணிரண்டு, கைத்துவாரமிரண்டு, கோசமொன்றெ ன்க. இம்மதத்தின் மணம் பெண்கள் கூந்தன்மணமும், வேங்கைம லர்மணமும் போலிருக்குமென்பர். முறையே சீவகசிந்தாமணி, கனக மாலையாரிலம்பகம்-கூரு-வது செய்யுளில், "புணர்மருப்பியானையின்பு யல்கொண்மும்மத - மணமகள்கதுப்பெனநாறுமாநகர்" என்பதனு லும்; கம்பராமாயணம், நகரப்படலம், ருஅ-வது செய்யுளில், "விலக் கருங்கரிமதம்வேங்கைநாறுவ" என்பதனுலுங்காண்க.

இத்தன்மையுள்ளதாயினுமது யாழிசைக்கு வசமாகி வணங்கு மென்பர், ஞானமிர்தம், "வணக்கவாரா - வைம்புலவேழத்தின்வெந் தொழில்வியக் - கருணைவீணைகாமுறத்தழீஇ" எனக்கூறிய, ச-வது திருவகவலினும்; தணிகைப்புராணம், திருநகரப்படலம்; "கலவியா ற்றியகாலையும் புலவிக்காலத்துங் - குலவுதந்நடை குறைந்தமைக்கொ சுகுமாரொதுங் - நிலவுவெண்கரி வணக்கியநிகரில்யாழ்தழுவி - மல ருமின்னிசையெழுப்புவர் மேனிலமகளிர்." எனக்கூறிய, கஉரு-வது

கவியினுங்காண்க. சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், உ௫௬-வது கவியுரையில், யானை நாதத்திற்ருேற்றுதலின் அதற்கு வணங்குதலியல்பென்ருர்.

இது மேற்கூறிய மதநாற்றத்தாலே மற்றையானைகளை அஞ்சுவிக்குமென்பர். "நாறும்மதத்தினலேநாகத்தையிரிக்குநாகம்" எனச்சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், உ௫அ-வது செய்யுளிற் கூறியதனுற்காண்க.

அரசர் மங்கள காரியங்களை நகரறிய இதன்மேல் முரசேற்றிப் பறையறையுங்கால் இதற்கு வெண்டுகிலுடுத்து, வெண்சாந்து பூசிச் சிறுதுவாரமிட்ட காதுகளிற் காதணிகளையணிந்து, மாலைசூட்டி, முத்தாபரணங்களணிந்து, திலகமுமணிந்து வைப்பாரென்பர். இவ்வாற்ருல், வெள்ளணியாக வணிதல் வேண்டுமென்பதாயிற்று. சீவகசிந்தாமணி, இலக்கணையாரிலம்பகம், "விளங்குவெண்டுகிலுடுத்து வெண்சாந்து மெய்பூசித் - துளங்குமஞ்சிகை துளைச்சிறு காதினுட்டுளங்க - வளங்கொண்மாலைகள் சூடிமுத்தணிந்து வண்முரசங் - களங்கொள்வேழத்தினேற்றினர்கடி முரசறைவான்" எனக்கூறிய, க௦-வது செய்யுளிற் காண்க. மஞ்சிகை - காதணி.

அரசாட்சிக்குரிய புத்திரரில்லாதபோது மந்திரி முதலாயினேர் கூடி யானையைத்துகிலாற் கண்கட்டிவிட்டு, அது பிடர்மீதேற்றிக் கொண்டுவரப்பட்ட வுத்தமரை யரசராக்குவர். பெரியபுராணத்தில், மூர்த்திநாயனர் புராணம், "கண்கட்டிவிடுங்களியானையக் காவன்மூதூர்- மண்கொட்புறவீதிமருங்குதிரிந்துபோகித் - திண்பொற்றடமா மதில்சூழ்திருவாலவாயின் - விண்பிற்படவோங்கிய கோபுரமுன்பு மேவி" "வேழத்தரசாங்கண் விரைந்துநடந்துசென்று - வாழ்வுற்றுலகஞ்செய்தவத்தினின் வள்ளலாரைச்-சூழ்பொற்சுடர்மாமணி மாநிலந்தோய முன்பு - தாழ்வுற்றெடுத்துப்பிடர்மீது தரித்ததன்றே." எனக்கூறிய-௩௨, ௩௪-வது செய்யுட்களிற் காண்க.

இதன்மேற் தீர்த்த நீரைவைத்துக்கொண்டு வருவதுமுண்டு; முறையே, சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், "கங்கையின்களிற்றினுச்சிக்கதிர் மணிக்குடற்றிற்றந்த- மங்கலவாசநன்னீர்."

எனக்கூறிய, ௩௬௧-வது செய்யுளிலும்; மண்மகளிலம்பகம், "கோல் பொருகொடுஞ்சிலை குருதிவெம்படை - மேலவரடக்குபு வேழமேற லின் - மாலிருவிசும்பிடைமலர்ந்த வொண்கொடி - கால்பொருகதலி கைக்கானமொத்தவே."எனக்கூறிய, ௧௧௧-வதுசெய்யுளிலுங்காண்க.

இது தன் கையை நிலத்து விழாமற் கொம்பின்மேல் வைத்துக் கொள்ளுமென்பர். சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம், ௬0௪-வது கவியில், "வலியுடை மருப்பினல்லால் வாரணந்தடக்கை வையாது" எனக்கூறலாற் காண்க.

களவுமுதலிய குற்றஞ்செய்தோரை அரசர் இதன் கொம்பாற் குத்திக்கொல்லச் செய்வரென்பர். சீவகசிந்தாமணி, முத்தியிலம்ப கம், "முளரிமுகநாகமுளையெயிறுழுதுகீற-அளவிறுயர் செய்வரிவண் மன்னரதனுளும் - விளைவரியமாதுயரம் வீழ்கதியுளுய்க்கும்-களவுகட னுகக் கடிந்திடுதல்சூதே" எனக்கூறிய, ௨௭௨-வது கவியிற் காண்க. சூது - உபாயம்.

இதன் பசுந்தோல், பிறருடம்பிற் பட்டாற் கொல்லுமென்பர். சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம், ௧அ௬-வது கவியுரையிற்காண்க. சிவபிரானிதனைப் போர்த்திறவாதிருக்கின்றார். இதன்றந்தத்தாலே சீப்பு, செப்பு, தோடு, உலக்கை, செய்வதுண்டென்று அச்சீவகசிந் தாமணியிற் கூறினர்.

கட்டிற்காலாகவுஞ் செய்யலாமென்பர். புறப்பொருள்வெண் பாமாலை, நொச்சிப்படலத்தில், "ஒள்வாண்மறவருறுத்தெழுந்தும் பர்நாட் - கள்வார் நறுங்கோதை காரணமாக்—கொள்வான் - மருங் கெண்ணிவந்தார் மழகளிற்றின்கோடிக் - கருங்கண்ணிவெண்கட்டிற் கால், எனக்கூறியதனுற்காண்க.

இக்கொம்பு முற்றினல் முத்துண்டாம் என்பது, புறநானூறு "பனைமருடடக்கையொடு முத்துப்படமுற்றிய - வுயர்மருப்பேந்திய வரை மருணேன்பகடு" எனக்கூறிய, ௧௬௧-வது செய்யுளிற்காண்க. திருவிளையாடல், மாணிக்கம் விற்றபடலத்தில், "வேழமிரண்டினும் விளையுமுத்தந் - தானதுபொன்னின்சோதி" எனக்கூறிய, ருச-வது செய்யுளில், இம்முத்தினிறம் பொன்னிறமாயிருக்குமென்பர்.

புறநானூற்றில், யானை எறிகல்லைக் கன்னத்திலடக்கிக் கொள்ளும் என்றும், நடைக்கேற்ப ஒன்றற்கொன்று மாறுபட்டொலிக்குமணிகளையுடைய தென்றும், (௨௨) அரசரேவப்பகைவர் மதிலின் கட்கதவையும், மதிலையுங் குத்துமென்றும், (௩) பகைவர் காவற்பொய்கையைக் கலக்குமென்றும், மிக்கபசியால் மூங்கிலைத்தின்னுமென்றும், கூறப்படுவதன்றி அதற்குப்பட்டம், தந்தப்பூண்முதலிய ஆபரணங்களணியப்படுமென்றும், கற்றோர் முதலோர்க்குக் கன்றுடன் றியாகஞ்செய்யப்படுமென்றும், குழியினிடத்திலே யிட்டமேற்பரப்பிய பாவையறியாது மனச்செருக்கால் வந்துவிழப் பிடிக்கப்படு மென்றுங் கூறியிருக்கின்றனர். மணிமேகலையில், இதனை யடக்கும் கருவி முட்கருவியுந் தோட்டியும் பரிக்கோலுமென்பர்.

யானையேறுவார் அதனைத்தொழுது ஏறுவர். சீவகசிந்தாமணி; கனகமாலையாரிலம்பகம், "இழுகுபொன்மதத்தின் வரைக்குஞ்சரந் - தொழுதுவேய் முதற்றாசங்கொண்டேறினான்" எனக்கூறிய, ௪௯-வது செய்யுளிற் காண்க.

இந்த யானைக்கூட்டத்தை மிகவுடையவன், பல்யானைச்செல்கெழுகுட்டுவன் என்னுமொருசேரனென்பர். பதிற்றுப்பத்து-மூன்றாம் பத்தில், 'தன்னதாயமேல்கடனீரும் பிறநாட்டதாய்ப் பின்புதான் பொருது கொண்டு தன்னுடாக்கிய நாட்டின் கீழ்கடனீரும் ஒரு பகலிலேவரும்படி யானைகளைநிரைத்து அழைப்பித்து ஆடினா'னெனக்கூறியதனாற்காண்க.

இதற்குப் பாகலமென்னு நோயுண்டாமென்றும், அது பத்துவகைப்படுமென்றும், அவற்றுட்கூடபாகலம் வெளிக்குத்தோன்றாது மறைந்துநின்று விரைவிற்கொல்வது என்றுங்கூறுவர்; மகாபாரதம், பதின்மூன்றாம் போர்ச்சருக்கம், "பயந்தருகொடியகூடபாகலந்தணிந்து மெல்லக் - கயந்தெளிவுற்றதென்ன" எனக்கூறிய, ௧௫௩-வது செய்யுளிற்காண்க.

இது பரிசத்தால் உயிரையிழக்குமென்பர். "சுவையின்மீனளி நாற்றத்திற் றும்பியே பரிசந்தன்னில் - நவையிலாவசுணந்தானே நல்லிசைதனிற் பதங்கம் - உவகையாலொளியைவேட்டே யுயிரினையிழ

க்குமைந்தாம்." எனக்கூறிய, சூடாமணிநிகண்டு, பன்னிரண்டாவது தொகுதி ௯௭-வது செய்யுளிற் காண்க.

இது மனிதரைப்போல அறிவுடையதாயிருக்கின்றது. மலைநாட்டிலே மரமிழுத்தன்முதலிய வேலைகளைச்செய்வதை யின்றுங்காணலாம். திருவானைக்கா முதலியதலங்களிற் சிவபிரானைப்பூசித்திருக்கின்றது; திருவானைக்காப்புராணம், கௌசாரணியப்படலத்திற்காண்க. இலக்குமி முதலோரையும் பூசித்திருக்கிறது; கம்பராமாயணம், நீர்விளையாட்டுப்படலம், "தையலாளையொர்தாரணிதோளிணு - னெய்கொளோதியினீர்முகந்தெற்றினன் - செய்யதாமரைச்செல்வியைத் தீம்புனல் - கையினாட்டுங்களிற்றரசென்னவே" எனக்கூறிய, ௨௫-வது செய்யுளிற்காண்க.

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்,
சைவநூற்பரிசோதகர், மதுரைத்தமிழ்ச்சங்கம்.

---

ஸ்ரீ:

# நுண்பொருண்மாலை.

(முற்றொடர்ச்சி.)

௫௬௨. "கடிதோச்சி.........பவர்."

நு - லை:—கெடிது - நெடுங்காலம். ஓச்சுதலெறிதலென்பன இரண்டும், முறையே கோல் என்னு முவமைபற்றி வந்தன.

௫௬௩. "வெருவந்த.........கெடும்."

நு - லை:—ஒருவந்தம், ஒருதலை, ஏகாந்தம் என்பன ஒருபொருட்கிளவி. வெங்கோலனென்பது வாளாபெயராய் நின்றது; வெருவந்த செய்தலும் அப்பொருட்டாதலினென்க. "அடியளந்தான் ருஅய" தும் (திருக்குறள்-௬௧0) அது. கோவையாருள், "கருங்கண்ணனை" (௫௩) என்பதும், "தெள்ளி நறவந் திசைத்திசை பாயு மலைச்சிலம்பா" (ஷை-௧௨அ) என்பதும் அது. "பெயர்நிலைக்கிளவியின்"

(தொல். சொல்-௪௪௬) என்னுஞ் சூத்திரத்திற், "களிறுகண்டல்லது வாளுறை கழிப்பறியா வேலோன்" எனவும், "செழுந்தாமரையன்ன வாட்கண்" எனவும் நச்சினார்க்கினியரு முரைத்தாரெனக.

ருஎக. "கண்ணோட்ட............உலகு"

ந - லே:—கழிபெருங் காரிகை யென்புழியொருபொருட்பன் மொழிபற்றி இவ்வுயிரழகது சிறப்புணரநின்ற தென்றார். "தஞ்சமெளியன்" (திருக்-அ௬௬) என்பதும், "உடுத்தணி வாளரவன்" (௩௫௨) என்னுங் கோவையாரில், "அணிகாம"ரென்பதுமது. பரிபாட்டினுள், "நிவந்தோங்குயர் கொடி"க்குமிவ்வாறுரைத்தாராதலால், "ஒருபொருட் பன்மொழி சிறப்பினின் வழா" என்னுஞ் சூத்திரம் நன்னூலில் வருதலாலகத்தியமாதல் அவியமாதலாகவேண்டுமெனக. இனி அவ்வாறு வருவதனை, "ஒருபொரு ளிருசொற் பிரிவில வரையார்" என்னுந் தொல்காப்பியத்துள், (தொல், சொல்-௪௬௦.) நச்சினார்க்கினியரடக்கினரெனக.

ருஎ௩. "பண்ணென்னும்............கண்"

ந - லே:—இறுதியிற்கண்ணென்பது, கண்ணகன்ஞாலம் போல முற்றிடப்பொருள் பெற்று ஏழாம் வேற்றுமை யாகாமைகாண்க. வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாதென்பது பற்றி.

ருஎ௬. "மண்ணோடியைந்த.........தவர்"

ந - லே:—மரக்கண்ணென்பதனை இக்காலத்தார் "கணு" வென்பர்.

ரு அக. "ஒற்று........கண்."

ந - லே:—தெற்றென்கவென்பது தெற்றெனென்பது முதனிலையாகவந்த வியங்கோள். "தெற்றென நன்கறிந்த நாளும்விரைந்து" என்னும் பாட்டிற் றெற்றெனவென்னுஞ் செயவெனெச்சத்தாலுங் காண்க. பொள்ளெனக் கதுமெனத் தவ்வென வென்பனவுமது. எழுந்திருந்தான் உய்த்துவிடுமென்பவற்றிற்கும் எழுந்திரு உய்த்துவிடு எனமுதனிலை காட்டுக.

ருஅஉ. "எல்லார்க்கு...........றெழில்."

நு - லை:—நான்காவதேழாவதன் பொருட் கண்வந்தது. "இத னினிது விற்று" (தொல், சொல்-௧௧௦.) என்னுஞ் சூத்திரத்துள், அன்னபிறவுமென்றதனால் ஊர்க்கட்சென்றான் ஊர்க்குச்சென்றானென்பது போலுமென்க. ஞாபகத்தைக் காரகமாக்கியறிதலைத் தொழிலென்றது உபசாரவழக்கு.

௫௮௫. "கடாது.........யொற்று."

நு - லை:—கடாவென்பது கடுக்குமென்னும் பெயரெச்சத் தெதிர்மறை. கடுத்தவென்னுமிறந்தகாலப்பெயரெச்சத் தெதிர்மறையாகிற கடாதவென விறந்தகாலத் தகரவிடைநிலைபெற்றே நிற்குமென்பதிவர் கருத்துப்போலும். தகரவிடைநிலைபெறாது நிற்கில் விகாரமென்பர். அது கெடாவழிவந்த கேண்மை வளங்குன்றாநாடென்ப; இவற்றின்கட்காண்க.

௫௮௭. "மறைந்தவை..........யொற்று."

நு - லை:—வற்று - வல்லது.

௫௮௮. "ஒற்றொற்றித்..........கொளல்."

நு - லை:—மற்று - பிறிது. பின்னூல்செய்தாரு மற்றுக்கு வினைமாற்றசைநிலை பிறிதென்றாராதலால் அஃதிவ்வுரை யாசிரியர்க்கு மொத்தது.

௫௯௧. "உடையரெனப்..........மற்று."

நு - லை:—உடையதெனப்படுவதூக்கமென்று முன்னுமஃறிணை வாய்பாட்டாற்சொல்லாது உடையரென உயர்திணை வாய்பாட்டாற் சொல்லியதால், அதற்குரியாரென்று சொல்லச் சிறந்தவூக்கமென்றார். அது வினவியறிக. } மற்று - வேறு.

௬௦௦. "உரமொருவர்க்..........வேறு."

நு - லை:—வெறுக்கை - ஊக்கமிகுதி. ஆதலென்னுமொருவினை முதற் சொல்லிடத்து நின்ற அல்லீற்றுவிகுதிவியங்கோள் மக்களார் மரங்களாவாரென எதிர்மறையினுமுடம்பாட்டினும் வந்தது.

"மகனெனல் மக்கட்பதடியெனல்." என்பதிருசொல்லின் கணின்று இருபொருளையும் விளக்கிற்று. "ஒளியொருவற்குள்ள" (வள்-கூஎக) வெறுக்கையுமது.

சுOக. "குடியென்னுங்...........கெடும்."

ந - லை:—விளக்கமாகுர மாய்ந்து கெடுதல் விரோதப் பொருள். "மொய்ம்மலர்க் காந்தளைப் பாந்தளென்றெண்ணித் துண்ணென்றுரு ளித்துக், கைம்மலராற்கண் புதைத்துப் பதைக்குமெங் கார்மயிலே" யென்னுங் கோவையாருமது. (உநந.)

சுOந. "மடிமடிக்.......... மூந்து."

ந - லை:—மடிக்கொண்டொழுகல் - அகத்தேகொண்டொழுகல்.

சுOஎ. "இடிபுரிந்...........லவர்."

ந - லை:—புரிதல் முன்னதுசெய்தல், பின்னது விரும்புதல்.

சுகக. "அருமையுடைத்...........தரும்."

ந - லை:—அசாவாமை - தளராதொழிக; மையீறு வியங்கோளானது. "அவற்றுள், முன்னிலைத் தன்மையாயீரிடத்தொடு" என்னுஞ் சூத்திரத்துள், "அஞ்சாமையஞ்சி"னேனென நச்சினார்க்கினியாருமுரைத்தாரென்க. (தொல், சொல்-உஉஅ.)

சுகஉ. "வினைக்கண்...........துலகு."

ந - லை:—தீர்ந்தன்று தீர்ந்ததென அஃறிணையொருமைக்கண் வந்த றுவ்வீற்று வினைமுற்றுச்சொல், "களம்வேட்டன்று" "நகையமர்ந்தன்று" என்பனவுமது. (வெண்பாமாலை.)

சுகந. தாளாண்மை...........செருக்கு."

ந - லை:—தாளாண்மை - உபகாரியாந்தன்மை. வேளாண்மை வேளையாளுதற்றன்மை. ஆளென்பது முதனிலைத்தொழிற்பெயர்.

சுநக. "கருவியுங்...........தமைச்சு."

ந - லை:—வடநூலாரிவ்வைந்தினையுமந்திரத்திற் கங்கமென்ப. அரசங்கமாறு, அமைச் சங்கமைந்து.

௬௩௨. "வன்கண்............தமைச்சு."

நு - லை:—முன்பாட்டிற் சொல்லிய அங்கங்களோந்துடனீண்டுரைத்த நான்கையுங் கூட்டுக. எண்ணொடு நீண்டது. "உடம்போடுயிரிடைநட்"பென்பதுபோல நீளாது நிற்கினுங், குற்றமில்லை; அதனையீண்டு நீண்டதென்பது இன்னொலிநோக்கியே யென்க. உரையுள் அவருடனென்பதனை அவரென்றது பட்சாந்தர முரைப்பாரை.

௬௩௬. "மதிநுட்ப............பவை."

நு - லை:—மதிநுட்பம் பின்மொழி நிலையல். வேங்கைப்பூவென்பது மத. அதியென்பது வடசொல்லின் மிகுதிப்பொருள தோரிடைச்சொல். வடநூலார் உபசர்க்கமென்பார்; அது திரிந்து நுட்பமென்பதனோடு தொக்கது. இனி, அதினுட்பமென்று பாடமோதுவாருமுளர். "அவர் சூட்சிக்கினமாய்ச் சுட்டப்படுவதொன்றில்லாமையுஞ் சுட்டுப்பெயரைந்தாமுருபேற்றவழி யவ்வாறு நில்லாமையுமறிந்திலர்" என்றது, "சுட்டுமுதலுகரம் அன்னொடுஞ்சிவணி" (தொல்-எழுத்-௧௭௬.) என்னுஞ் சூத்திரவிதியாலென்க. உழையிருந்தானெனப் பெயர்கொடுத்தார் அமாத்தியனென்னும் வடமொழிப்போக்கும் அப்பொருண்மையதாகலின்.

௬௪௨. "ஆக்கமுங்............சோர்வு."

நு - லை:—அதனாலென்பது, "முற்படக்கிளத்தல் செய்யுளுளுரித்தே" (தொல்-சொல்-௩௯.) என்பதனானறிக. 'அவனணங்கு நோய் செய்தான்' என்பதுபோலச் செய்யுளாகலிற், சுட்டுப்பெயர் முன்வந்தது. ஆக்கத்திற்குங் கேட்டிற்குங் காரணமாகிய நற்சொல்லுந் தீச்சொல்லுஞ் சொல்லாத லொற்றுமைபற்றி அவற்றாலென்னாது அதனாலென்றொருமையாக்கினார்.

௬௪௩. "கேட்டார்ப்............சொல்."

நு - லை:—தகையவாய்-குணங்களை அவாவி. அவாவென்னுமெச்சமொழிவதென்னுஞ் செயப்பாட்டு வினைகொண்டது என்றார், தகையமொழிவதென்னும் பன்மையொருமை மயங்காமல்.

௬௪௫. "சொல்லுக...........யறிந்து."

ரு - லே:—பின் வருநிலை. பட்சாந்தரமிதனிலமிக்காய்த் தோன்றுவது காண்க.

௬௫௩. ஓஒதல்...........மவர்."

ரு - லே:—ஓஒதலென்பது அடியளந்தான்றாவியது - தாயதென்றாற் போலிடைக்குறைந்தது. வினைசெய்தலை யென்றதனால், முதனிலைத் தொழிற்பெயர் மாற்றப்பட்டது.

௬௫௬. "அழுக்கொண்ட...........லவை."

ரு - லே:—நற்பாலவைபிற்பயக்கு மென்றதற்கு நற்பாலவைதானே பயக்குமென்று தன்வினையாயுரையாமல் பின்வந்து பயன்கொடுக்குமென்றுபயனைச் செயப்படுபொருளாக்கினர். இவ்வுரையாசிரியர்க்குப் பயக்குமென்பது செயப்படுபொருளடைந்த சொல்; "இருணீங்கியின்பம் பயக்கு" மென்பதனுட், காட்சியென்பதனை எழுவாயாக்கினதுங் காண்க. இதனைவடநூலார்சகன் மகமென்பர்.

௬௬௦. "சலத்தாற்...........யற்று."

ரு - லே:—இரீஇயென்பதனை யிருத்தியெனப் பிறிதின் வினையாக்கிப் பட்சாந்தரத்தைத் தூஷித்தார். "நன்கிரீஇ யாண்டும் பிறிதுயாது நோக்கா"னென முள்ளியார் தன்வினையாக்கினராதலால் இவ்வுரையாசிரியர் கருத்து எம்மனோர்க் கறிதலரிதென்க.

௬௬௫. "வீறெய்திமாண்டார்...........படும்."

ரு - லே:—ஊறு - உறுதல். பாடு, வீடு, கேடு என்பனவுமதுபோலும். அறத்துப்பாலுள், எச்சத்திரிபுகாட்டியதால், அவ்வாறு திரிபுமெச்சங்களைமீண்டுக் காட்டாதொழிந்ததெனவறிக.

௬௬௭. "உருவுகண்...........ருடைத்து."

ரு - லே:—எள்ளாமை யிகழ்தலையொழிகவென வமைதிற்று "அருமையுடைத்தென்றசாவாமைவேண்டும்" என்பதுபோல வியங்கோ

ளானது காண்க. ஈண்டும், வேண்டுமென்பது ஒரு சொன்னீர்மைத்து. எனல், ஓதல், கொளல் என்னும் அல்லீறு தொழிற்பெயராயும் வியங்கோளாயும் வருதல்போல, மையீறுமவ்வாறு வருமென்க.

சுசுசு. "துன்ப...........வினை."

நு - லை:—கணிகமாயமுயற்சி - நொடிப்பொழுதிலழியு முயற்சி. பரிணாமவின்பம் - ஒன்றொன்றாய்ப் பரிணமித்து நெடுங்காலநிற்பது.

சுஎஅ. "வினையான்...........தற்று."

நு - லை:—அன்னபிறிதுமோரானையென்றதனாற் பிணித்தற்கருமைதோன்றப் பின்னுங் கூட்டுக வென்றார்; அது "நனைகவுள்யானையாத்தற்று" என்பது.

சுஅஉ. "அன்பறி...........மூன்று."

நு - லை:—ஆராய்ந்த சொல்வன்மையாராய்ந்து சொல்லுதல்வன்மையென்றமையாற் சொல் முதனிலைத்தொழிற்பெயர். ஆராய்ந்தவெனப் பெயரெச்சமாக உரையாது வினையெச்சமாகவுரைத்தல் காண்க. முருகாற்றுப்படையுள், "சீரைதைஇய" என்றற்குரைத்தாங்குரையாது "திலகந்தைஇய" என்பதற்கு வினையெச்சமாகவுரைத்ததும், "உரையிடத்தியலு முடனிலையறிதல்" (தொல்,சொல்-சருஅ) என்னுஞ் சூத்திரத்துட் "பெண்மை சுட்டியவுயர்திணை மருங்கின்" என்பதனையும், "ஆடிய கூத்தனும் வந்தானவனொடு-கூடிய கூத்தியுங் கொண்டு" எனவுங்காட்டி, யிவற்றைப் பெயரெச்சம் வினையெச்சமாகத் திரிந்ததெனவும் நச்சினார்க்கினியரு முரைத்தாரென்க.

சுஅரு. "தொகச்சொல்லித்...........தூது."

நு - லை:—எண்ணும்மைவிகாரத்தாற்றொக்கது. எண்ணும்மை தொகுவது, உம்மைத்தொகை. விதியாயிருந்து மதனைவிகாரமென்றது; "வினையொடு நிலையினு மெண்ணுநிலை திரியா" (தொல். சொல். உகரு.) என்னுஞ்சிறப்புவிதி பற்றியென்க.

(தொடரும்)

பத்திராசிரியர்.

*

# ஐயநிவிர்த்தி.

"திருஞானசம்பந்த மூர்த்திநாயனாருந், திருநாவுக்கரசு நாயனாருந் திருவாய்மலர்ந்தருளிய தேவாரப்பதிகந்தோறும் இராவணனைச் சுட்டிக்கூறியிருப்பது எதுபற்றியோ இதை நிவிர்த்திக்குமாறு வேண்டுகின்றேன்."

## என்பது, ரெங்கோன். நா. அ. சு. செட்டியாரவர்கள் காலிகித வசனம்.

திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் புராணத்தில்,

மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையிற்
கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளு மெனக்காட்ட
வெண்ணமில்லா வல்லரக்க னெடுத்துமுறிந் திசைபாட
வண்ணலவர்க் கருள்புரிந்த வாக்கப்பாட் டருள்செய்தார்.

எனக்கூறியருளிய, ௭௭-வது செய்யுளாலும்,

திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில்,

இத்தன்மை நிகழ்ந்துழி நாவின்மொழிக் கிறையாகிய வன்பருமிந்நெடுநாட்
சித்தந்திகழ் தீவினை யேனடையுந் திருவோவிது வென்று தெருண்டறியா
வத்தன்மைய னாயவி ராவணனுக் கருளுங்கருணைத்திற மானவதன்
மெய்த்தன்மையறிந்து துதிப்பதுவே மேல்கொண்டு வணங்கினர் மெய்யுறவே.

எனக்கூறியருளிய, ௭௫-வது செய்யுளாலும் நிவிர்த்தி செய்துகொள்க.

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்,

சைவநூற்பரிசோதகர்.

மதுரைத் தமிழ்ச் சங்கம்.

உ

திருச்சிற்றம்பலம்.

# தனிச்செய்யுட்கோவை.

(முற்றெடர்ச்சி.)

---

எத்தரியலிங்ககுருசங்கமந்தா னேகபரன்மனம்வாக்குக்காயமாகும்
வாய்த்தமனஞ்சிவலிங்கமாகுமூல மலமகற்றுங்குருவருள்சேர்வாக்குமாயை
தீர்த்தருளுஞ்சங்கமமாமேனிதன்னுற் றீராதவிருவினையுங்கன்மநீங்கு
மாத்தமலமூன்றகற்றுங்குறியீதாகு மல்லதுமற்றென்றாலுமகன்றிடாவே.

திருக்குற்றாலத்துக்குப் பக்கத்திலுள்ள செங்கோட்டைக் கவி ராஜபண்டாரத்தையாவவர்கள் கூறியகவி.

அருவித் திரிகூடத் தையா வுனைநான்
மருவிப் பிரிந்திருக்க மாட்டே—னொருவிமலைக்
காதியிலே பாதிதந்தா யத்தனைவேண் டாமெனக்குப்
பாதியிலே பாதிதந்து பார்.

வசைகவி ஆண்டான் கவிராயர்க்கும் சொக்கலிங்கக் கவிராயர்க்கும் விவாதம் வந்தபோது ஆண்டான் கவிராயர் கூறியகவி.

ஓலைதேடியெழுத்தாணிதேடியா ளோய்ந்திருக்குமிடந்தேடியேயொரு
மூலைதேடிமுனைமூக்குக்கண்ணாடி முன்னர்வைத்துமுதுசொற்கள்தேடியே
மாலைதேடிக்கொடித்தேடிநாட்டுடை வளத்தைத்தேடிவழுத்துவையோர்கவி
சாலைதேடியபாப்பான்குளத்துக்குத் தக்கசொக்கலிங்கக்கவிராயனே.

(தொடரும்.)

பொ. பாண்டித்துரை.

உ

சிவமயம்.

# அறச்சிறப்பு.

## அறஞ்செய விரும்பு.

அறம் - தருமத்தை, செய - செய்தற்கு, விரும்பு - நீ ஆசை கொள்.

நால்வகைத்தோற்றம், எழுவகைப்பிறப்பு, எண்பத்துநான்கு நூறாயிரயோனிபேதம் என்னுமிவற்றையுடையனவாய்ப் பிறந்திறந்துழலு மான்மகோடிகளெல்லாஞ் சராயுசமாகிய சனனத்தினுள்ளும் மேலான மனிதப்பிறப்பையெடுக்கின், இன்றியமையாததாயவசியஞ் செயற்பாலது யாதென வாராய்ச்சிசெய்யுமிடத்து அறமே. அதுபற்றியே ஔவையாரும் அதன்சிறப்பினைக் கூறுவான்றொடங்கி முதலிலே எல்லாவெழுத்திற்குமாதியாகிய அ என்னுமச்சை முதலாகக் கொண்டு "அறஞ்செயவிரும்பு" என்று கூறினாரென்க.

அதுதான் இல்லறமுந் துறவறமுமென இரண்டுவகைப்படும். இன்பம் வீடுபோலாது அறமென்று சொல்லப்பட்டது யாதுகாரணம் பற்றியோவெனின், ஒருவற்கு இம்மைமறுமை வீடாகிய மூன்றனையும் பயத்தலின் முற்கூறியவற்றுள்ளுமறஞ்செய்தல் வலியுடைத்து என்பதுபோதர ஆதியினதனைக்கூறினார்.

அறம் இல்லறம் துறவறம் எனவிருபிரிவுடைத்து என்றதெற்றுக்கெனின், ஒருவன் இல்லறத்தை முதற்கட்செய்யாது துறவறஞ்செய்யவியலாது. இல்லறமாத்திரையே நிற்றலுமியலாது. அதன் மாத்திரையே நிற்பின் முத்திசித்தியாதாகலின். முதலிலே வள்ளுவரும் இல்லறவியல்புகளைக் கூறிப்பின்னர்த் துறவறத்தின் மாட்சிமை கூறினாரென்க.

அறஞ்செய்தல் பலவகைப்படும். அவையாவை, கோவில்களிலே திருத்தொண்டுசெய்தல், பூசைக்குதவிபுரிதல், புராதனாலயங்களைத் திருத்துதல், மிருகங்களுக்குப் புன்முதலியவற்றால் அவைகளின் இன்னலைநீக்கல், தண்ணீர்ப்பந்தல்வைத்தல், கிணறுமுதலிய வெட்

டல், அன்னங்கொடுத்தல், நோயாளர் குருடர் மூடவர் முதலாயினோ ரைத்தாபரித்தல், வித்தைக்குரிய கலாசாலைகளை நடத்துதல், நடப் பித்தல் முதலியபலவகையாம்.

இவையாவற்றையு மெவ்வாற்றாற் செய்யினும் இல்லாளுடன் தவ றின்றிச் செய்பவர்க்கே முற்கூறிய இம்மை மறுமை வீடுபயக்குமெ ன்பது போதர "இல்லறமல்லது நல்லறமன்று" என்று கூறினர் என்க.

இதுபற்றியே திருவள்ளுவரும் "அறனெனப்பட்டதேயில் வா ழ்க்கை யஃதும்-பிறன்பழிப்பதில்லாயினன்று" என்று கூறினர்.

இனி இவ்வாறாகிய இல்லறத்தைச்செய்து, பின்பு புறமாகிய செல்வத்தினதும், அகமாகியயாக்கையினதும் நிலையாமையைநோக்கி அவற்றினை விடுத்தலேயாம். "அறஞ்செய்யுமகன்றேவருள்ளேவை க்கப்படுவான்" நிலவுலகத்தினுள்ளவற்று ளறந்தானேயுடன்செல்லு மாகலின். அறத்தினை யொருவன் செய்வதினால் அடையும் பயன் கூறுதலரிது. செய்யாவிடின் அதனாலடையும் கேடுகளைக் கூறுத லரிது.

இதுபோதர "அறத்தினூஉங் காக்கமுமில்லையதனை - மறத்தலி னூஉங்கில்லை கேடு" எனக் கூறினர் என்க.

ஆதலினிவ்வியல்பினையுடைய அறத்தையாவருஞ்செய்யவேண் டுமென்பதே துணிந்தபக்கம்.

ச. ஜகநாத ஐயர்

---

உ

திருச்சிற்றம்பலம்.

# பெரியபுராண அரும்பத விளக்கம்.

:o:

[பழைய ஏட்டினின்று எடுக்கப்பட்டது.]

(முற்றொடர்ச்சி.)

(உஎ) வழிபலவும் போதலரிதாயிட அதனைக்கண்டுமீளவும் தம்வீட்டை அடைவார்.

(உகூ) பறையறைந்தபணியாலே அணியாரூர்மறுகதனில் ஆளியங்குமாறு மணிகளில் நிறைத்து.

(௩௨) தேவர்கள்ஒதுங்கத் திருத்தொண்டர்கணெருங்கும்.

(சஎ) பரவையார் விழாக்கொடைக்குக்குறைவறுக்க.

(சகூ) சிந்தைமுன்னம் அங்கொழிய - மனக்குறிப்பானது அப்பொழுதுநீங்க. சிவனருளாலேயோ யாமறியேம். அழகிய கண்களில் நித்திரைவந்தடைந்தது.

(௫0) திருப்பணிக்காகச்சுடப்பட்ட செங்கற்கள்பலவற்றைக் கொணர்வித்துத் தேனையுண்ணும் வண்டுகள் நிறைந்த மலர்வைத்து முடித்த குடுமிமேலணையாக உயரம்பண்ணுவித்து.

(௫௫) பொற்கல்லானவை ஆளின்மேனெருங்கிப் பரவையார் தம்மாளிகையிற்புக.

(௫௬) தெய்வப்பெருமாள் - வீதிவிடங்கப்பெருமாள்.

(௬க) வாசியறிந்து - வாசியைப்பகுத்தறிந்து, கைத்திருத்தொண்டோடு பதிகம்பாடுந்திருத்தொண்டையும் ஒருங்குடைய திருநாவுக்கரசுநாயனுருக்கு வாசியின்றியும், பதிகம்பாடுந்திருத்தொண்டைமாத்திரமுடைய திருஞானசம்பந்தமூர்த்திநாயனுருக்கு வாசியோடுங்கொடுத்தமைபற்றி இவ்வாறு கூறியருளினர்.

(௬௩) மூரிவெள்ளக்கங்கையினில் - மிக்கவெள்ளத்தையுடைய கங்கையோடு.

(௬௪) செங்கணன்வளவன் றளங்கொள்பிறப்பும் - கோச்செங்கட் சோழநாயனுருடைய மேன்மைபொருந்திய பிறப்பையும்.

(௬அ) வட்டமானகுரும்பை போலுந்தனங்களையுடையாள்.

(௬கூ) திருக்குடமூக்கு - கும்பகோணம். திருநாவுக்கரசுநாயனுருக்குச் சிவபிரான்திருவடி தீக்ஷைசெய்தருளிய.

(எ0) இசையோடுபரவுந் தம்முடையசொல்லையே இலாபமாக வணிந்த சிவபிரானுடைய.

(எஅ) கேதம் - வருத்தம்.

(அக) திருத்தொண்டர்முகப்பே - திருத்தொண்டர்முன்னே.

(அஉ) நித்தியமும்பிரியாத நிலைமையினின்று நீங்கிப்பூமியில் அறிவுபொருந்திய மனுடப்பிறப்போடு விடுத்தகாரணத்தை அறிந் தவருந்தி ஒருப்பாட்டையுடைய ஏழுபிறப்பினுமடிமை என்பதை யுணர்த்திச்சிறிதுமருளாதொழிந்தாலும், தலைவர் இவரல்லாதில்லை யே என்பாராய் "வைத்தனன்" என்று பதிகத்தைப்பாடியருளினார். நித்தமுநீங்காநிலைமை - சாமீப்பியம்.

(அரு) "ஏசினவல்ல" என்றுபாடியருள.

(அ௬) கண்டவர் - தரிசித்த சுந்தரமூர்த்திநாயனாரானவர். வண்டுகளொலிக்கின்ற கூந்தலையுடைய பெண்களது மனத்தைக்கவர் கின்ற பிச்சைக்குவருந் திருவடிவத்தைத்தரிசித்த இருடிபன்னியர் கள் கொண்டமயக்கத்தால்.

(அஎ) உழை - இடம்.

(அஅ) நாமமான அஞ்செழுத்தை அறிய.

(அகூ) படப்பை - சோலை.

(கூ0) ஆனந்தக்கலுழி - ஆனந்தவெள்ளம்.

(க0அ) நனியருள் கொடுக்குமாற்றால் நல்கிட - மிகவுமருள் கொடுக்குமாற்றோடு கொடுக்க. தனிமகிழ்ச்சி - ஒப்பற்றமகிழ்ச்சி. கனிவிடம் - கொடுமைமுதிர்ந்தவிடம.

(க0கூ) மருளுறவியப்ப - மயங்கிவியக்க. அங்கேவரப்பெறல் வேண்டும்.

(கக0) வன்றொண்டர் மச்சத்தைவெட்டிக்கைக்கொண்டு.

(கககூ) பொருந்தியவிருப்பத்தொண்டு பொருந்தும். உடம்பு விருத்திக்காகப்பொன்னையும் பெற்றவன்றொண்டரானவர் ஆன்மவி ருத்தியான தில்லைவாழந்தணர்களிருக்கின்ற சிதம்பரத்துள்ள கனக சபையில்.

(ககஎ) தாளாண்மை - தாளின்ஆண்டகைமை.

(க௨௦) பூமென்கருப்பு - பூவையுடையமென்கரும்பு (முற்றி ன கரும்பு)

(க௨௨) மத்தயானையெடுத்து - 'மத்தயானை'யென்னும் பதிகத் தையெடுத்து.

(க௨௬) மூவாத - அழியாத. ஓவாத - நீங்காத. தாவாத - கெடாத. திருமூலட்டானம் - திருமூலஸ்தானம்

(க௨அ) துணைவராகிய அவருடையகோயிலின் மாளிகைக்கு மேலைத்திசையில்.

(க௩௨) விபூதியழகராகிய சிவபெருமான் பாட்டைமகிழ்ந்து திருவிளையாட்டில் தாமதித்து. ஆற்றிலிட்டுக்குளத்திற்றேடுவீரே சிவனருளிதுவோசாற்றுமென்று திரண்டவளையலையணிந்த பரவை யார்மொழிந்தருள.

(க௩௩) முன்செய்த அருட்படியே வாசனைமலர்கின்ற பூவை வைத்துமுடித்த கூந்தலையுடைய பரவையானவள் தன்னுடைய சிவ ந்தவாயினகையைத் தாராமேபொன்னைத்தாருமென்று, ஒளிபொருந் திய யஞ்ஞோபவீதத்தையணிந்த மார்பையுடைய வன்றொண்டர்.

(க௩௪) செப்பமாக நான் பெறுதொழிந்த தளர்வினால்வந்த கவலையானதுன்பத்தை, இவளுக்கெதிரே கொடுத்தருளுமென்னும் கருத்தடக்கிய எட்டுத்திருப்பாட்டளவும்.

(தொடரும்.)

ஜி. சதாசிவம் பிள்ளை.